# இலக்கிய விழா மலர்



1967

...ரைச்சிக் கிராமசபை கிளிநொச்...

# முருகன் ஸ்ரோர்ஸ்

கரடிப்போக்கு, கிளிநொச்சி.

எங்களிடம்!

பலரகமான பிடவைகளும், பலசரக்குச்சாமான்களும் சாய்ப்புச்சாமான்களும்.

**கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தாரின் பிடவைகளும்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

# MURUGAN STORES

KARADIPPOKKU, KILINOCHCHHI.

**-: PRICE MODERATE :-**

*Dealers in*

Textiles, Wristlets Oilmanstores, Sundry Goods and Suit Cases Etc

Textiles, Groceries of Co-op Wholesale Establishments

# மக்கள் வைத்தியசாலை
# PEOPLE'S DISPENSARY

**KILINOCHCHI** கிளிநொச்சி.

சகல விதமான நோய்களுக்கும் உடனடி நிவாரணம்பெற அரசங்க அதிகாரம் பெற்ற டாக்கடர்களை ஆலோசியுங்கள்



DR. S. THIYAGARAJAH டாக். S. தியாகராசா
DR. E. GUNANATHAN டாக். E. குணநாதன்
D. A. M.
R. I. M. P.

இடம். மக்கள் வங்கிக்கு முன்பு

# சிற்றி பேக்கறி அன் ஹோட்டல்
# CITY BAKERY & HOTEL

உரிமை: ச. பொன்னம்பலம்

கண்டி வீதி, கிளிநொச்சி.

**பலவகை சிற்றுண்டிகளுக்கும் கேக்**

**வகைகளுக்கும் சிறந்த இடம்.**

இன்னும் ஆடர்களுக்குப் பலகாரங்களும் கேக்

முதலியவைகளும் செய்து கொடுக்கப்படும்.

ஏஜென்ட்: லிப்டன் தேயிலை, தவச பேப்பர்,

*VISIT*

# A. K. S. & SONS

JEWEL HOUSE

JAFFNA. Dial: *519*

---

*Balakrishna Furniture House Industries &* **Work shop**

Prop. E. RATNAM—

FASHIONABLE, BEST QUALITY FURNITURE AVAILABLE HERE AT ANY TIME. ORDERS UNDERTAKEN IN SHORT TIME GLASS WORK, FOMECA, ARE PERFORMED BY EXPERTS

KANDY ROAD, KILINOCHCHI.

---

# DEVAN TEXTILES

Kandy Road, KILINOCHCHI.

*எங்களிடம்:* பட்டு பருத்தி பிடவைகள் வேட்டி சால்வைகள், பப்பிளின் வகைகள், பெனியன் சேட்வகைகள் **C. W. E.** புடவைகள்
சகலவிதமான சாய்ப்புச் சாமான்கள்
கைத்தறி நெசவு சேலைகள், சூட்கேஸ்கள் இன்னும்

## உங்களுக்குத் தேவையான பலவித பொருட்களும்

*சகாயவிலையில் பெற்றுக் கொள்ளலாம்.*

# தேவன் ரெக்ஸ்ரைல்ஸ்

கண்டி வீதி, கிளிநொச்சி.

தொலைபேசி: இல. 9 தந்தி: "நெல்"

# வே. இ. தம்பிப்பிள்ளை

**கிளிநொச்சி.**

எங்களிடம் :—

லங்கா பெற்றோலியம் எண்ணெவகைகளும், றக்டர்களுக்கும் மோட்டார் வாகனங்களுக்குமுரிய சகல லூக்காஸ் P. M C. உறுப்புகளும்; மோட்டோர் வாகனங்களுக்குரிய மிச்சிலின், டன்லப், குட்இயர், கொன்ரிநென்ரல் ரயர், டியூப்புகளும், லூக்காஸ், எக்சைட், டெக்நைட், பற்றிகளும், என்றின், அக்கிறேசன், மற்றும் சகலவிதமான இரசாயன விவசாய கிருமி நாசினிகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாய விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

# V. R. THAMBIPILLAI

KILINOCHCHI.

*Branch :*

Lanka Filling Station — Kilinochchi & Mankulam.

Telephone : 9 Telegram : "**paddy**"

உங்கள் பொலிவிற்கு மெருகூட்டவும்

எல்லாவித விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்

**திருமண**

காலங்களுக்குத் தேவையான புதுமை

ததும்பும் புத்தம்புது டிசைன்கள்

கண்ணிறைந்த வண்ணக்

கோலங்களில்...

மனங்கவரும் தூய

**பட்டு பருத்தி ரகங்களுக்கு**

சிறந்த இடம்

# சுந்தரம் ஸ்ரோர்ஸ்

**கண்டிவீதி, வில்சன்ரோட், சந்தி, கிளிநொச்சி,**

# ஏ. சீ. ஆர். எஸ். அன் கோ.

## பலசரக்கு, இரும்பு, சாய்ப்பு, பாடசாலை
## உபகரண வர்த்தக நிலையம்.

கண்டி வீதி, கிளிநொச்சி

**எங்கவிடம்!**

உப உணவுப் பொருட்கள்.
சாய்ப்புச் சாமான்கள்;
அலுமினியப் பாத்திரங்கள்,
கமத்தொழிற் பயனை வகைகள்,
மருந்து வகைகள்,
பெயின்ற், வார்னீஸ், பூட்டு,
பிணைச்சல் போல்ட் ஆணி,
கம்பி ஆணி வகைகள்,
B. C. C. உற்பத்திப் பொருட்கள்

ஆகியவற்றைத் தொகையாகவும் சில்லறையாகவும்

மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

# பொருளடக்கம்


பக்கம்

ஆசிஉரை

கௌரவ உள்ளூராட்சி அமைச்சர்
கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
கரைச்சிக்கிராமசபை அக்கிராசனர்
,, உப அக்கிராசனர்
,, செயலாளர்

| | |
|---|---|
| கிளிநொச்சியில் மின்சாரம் | 2 |
| இலக்கியவிழா எதற்கு | 4 |
| எமது நூலகம் | 6 |
| எம்கடன் பணிசெய்து கிடப்பதே | 8 |
| கிளிநொச்சியும் இளைஞர் சமுதாயமும் | 10 |
| ஏழைத் தியாகிகள் | 13 |
| நூலகங்களும் அவற்றின் பயனும் | 16 |
| கரைச்சிச்கிராமசபை சித்தஆயுள்வேத வைத்தியசாலைகளும் சுதேசவைத்திய கலையும் | 18 |
| மகத்தான மாறுதல்கள் | 20 |
| இதோ இலங்கையின் கி (இ) ராமராட்சியம் | 23 |
| தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈழத்திருநாடு | 28 |
| நாடகம் வாழ, வளர | 30 |
| ஆதாரக் கல்விக் குருகுலம் | 33 |
| ஆரோகணம் | 35 |
| இலக்கிய இன்பம் | 37 |
| நவஜீவனத்தின் ஆண்டு | 41 |
| Karuna Nilayam | 45 |

## இலக்கியவிழா மலர்க்

## குழு

திரு. செ. வரதராசா

திரு S. மகேஸ்வரன்

திரு. ச. முருகேசு

இலக்கிய விழாச் செயலாளர்:

திரு. சி. ராசகுலசிங்கம்

உள்ளூராட்சி அமைச்சு,
ஹோமாஸ் கட்டிடம்,
கொழும்பு - 1
1967, டிசெம்பர் 2.



தமிழ் பேசும் மக்கள் தமது தனித்தன்மையைப் பாதுகாக்க வேண்டுமாயின் தமது கலை, கலாச்சாரத்தைப் பேண வேண்டும். இதற்கு இப்படிப்பட்ட இலக்கிய விழாக்கள் இன்றியமையாதவை.

இத்துறையில் உள்ளூராட்சி மன்றங்கள் கவனம் செலுத்தி வருவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். எனவே கரைச்சி கிராமசபையின் இலக்கிய விழாவுக்கு இச்செய்தியை விடுப்பதில் அகமகிழகின்றேன்.

வருடா வருடம் வெற்றிகரமான இதுபோன்ற விழாக்களை நடாத்தி வரும் இக்கிராமசபை எடுத்துள்ள பணி சிறப்புற்று வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

மு. திருச்செல்வம்
உள்ளூராட்சி அமைச்சர்



செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்
பண்டிதர்


## கா. பொ. இரத்தினம்

பி. ஏ. (ஆனசு) இலண்டன், எம். ஏ.,
பி. ஓ. எல் (சென்னை)
பாராளுமன்ற உறுப்பினர்
கிளிநொச்சி, இலங்கை

கரைச்சிக் கிராமசபை தொடர்ந்து இலக்கிய விழாவைக் கொண்டாடுவதறிந்து மகிழ்ச்சியுறுகின்றேன். உள்ளூராட்சி மன்றங்கள் இலக்கியம் - இசை-நாடகம் போன்ற கலைகளை ஊக்குவதால் பண்பட்ட சமுதாயத்தை உருவாக்குவதற்கு நன்கு உழைக்கலாம். சமுதாயத்தில் போட்டி, பொறாமை, பூசல்கள் தலையெடுப்பதற்கு மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக் குறைவே காரணமாகும். இக் குறையைச் சிறப்பாக நடத்தப்படும் இலக்கியவிழா, இசைவிழா போன்ற விழாக்கள் நீக்கத்தக்கன. எனவே, கரைச்சிக் கிராம சபையின் இலக்கிய விழாப்பணி எல்லோருடைய பாராட்டுக்கும் உரியது.

கிளிநொச்சி,
11-10-67.

கா. பொ. இரத்தினம்



தங்கள் கிராமசபை மறுபடி இலக்கியவிழா கொண்டாடுவதை யிட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன். ''தமிழ் வளர்த்த மதுரை'' என்ற வாக்கியம் போய், இன்று ''தமிழ் வளர்க்கும் கரைச்சிக் கிராம சபை'' என்று நாம் பெருமிதம் அடையக்கூடிய அளவில் உங்கள் கிராமசபை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வருகின்றது.

ஆதிகாலத்திலே தமிழை வளர்த்தவர் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் அதற்குப் பிறகு முடியுடை மூவேந்தர்கள் தமிழைப் பேணிக் காத்து வந்தார்கள். மாமன்னர்கள் காலம் ஒழிய குறுநில மன்னர்களும் கொடை வள்ளல்களும் தமிழை ஆதரித்து வந்தார்கள், ஆனால் இன்று மக்களாட்சி மிளிர்கின்ற காலத்திலே மக்கள் மன்றமாகிய உங்கள் கிராம சபை தமிழை வளர்ப்பது சாலப் பொருத்தமாகும்.

உங்களுடைய தமிழ்ச் சேவை பெருகி வளர வேண்டுமென்று ஆசீர் வதிக்கின்றேன்.

சி. சி. மாணிக்கவாசகர்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்

28 ஐப்பசி 1967



கரைச்சிக் கிராமசபை அக்கிராசனர்

திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள்

# கரைச்சிக் கிராமசபையில் மூன்று ஆண்டுகள்

கிராமசபை அலுவல்களில் பங்கு கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு என்றும் இருந்ததில்லை. அதை எனது ஆதரவாளர்கள் விரும்பியதுமில்லை. ஆனால் சில குறிப்பிட்ட வரியிறுப்பாளர் களின்வற்புறுத்தலின் பேரிலேயே 1964-ம் ஆண்டு கிராமசபைத் தேர்தலில் கலந்து கொண்டு 19 அங்கத்தவர்களில் 14பேரின் ஆதரவோடு மிக இலகுவாக அக்கிராசனர் பதவியையும் பெற்றேன்.

உள்ளூராட்சி மன்றங்களில் அரசியல் கலப்பற்ற சேவை செய்யவேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவன் நான் இதே அடிப்படையில் கடந்த மூன்றாண்டு காலம் சேவை செய்துள்ளேன் என்று நான் பெருமைப்பட உரிமையுள்ளவன். 19 வட்டாரங்களில் ஒன்றையேனும் பாகுபாடு காட்டி நடாத்தினேன் என்று எனது அரசியல் எதிரிகளே குற்றம் கூருது புகழ்மாலை சூடும் அளவிற்கு எமது நிர்வாகம் நடைபெற்றுள்ளதென்று கரைச்சிப் பகுதி மக்களுக்கு கூறுவதில் பெருமை அடைகிறேன். எமது நிர்வாகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு சில அரசியல் பிரச்சனை தவிர்ந்த ஏனையவை சபையால் ஏகமனதாக ஏற்கப்பட்டவையாகும்.

எதிரியின் நற்சேவையையும் பாராட்டுவதே தமிழினத்தின் பண்பாகும் ஆனால் பண்பு பற்றி கற்றறிந்தவர்களும் மேடைகள் மீது முளங்குபவர்களும் பண்பென்றால் என்னவென்று தெரியாத வகையில் நடந்தமை வேதனைக்குரியதாகும். ஒத்துழைப்புத்தர கடமைப்பட்டவர்கள் ஒத்துழைக்க மறுத்தது மட்டுமன்றி உபத்திரவமே கொடுத்து வந்திருக்கிறார்கள். பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட எனது வெற்றியை பண்போடு ஏற்றிருக்கவேண்டும். அதை விடுத்து, தோல்வியைத் தாங்காது சந்தர்ப்பவசத்தால் தமக்கேற்பட்ட சில வசதிகளை துர்ப்பிரயோகம் செய்து எம்மை பதவியில் இருந்து அகற்ற சில சக்திகள் முயற்சித்ததை நாடறியும். ஜனநாயக உரிமைகளைப் பற்றி அதிகம் பேசியவர்களே ஜனநாயகமென்றால் என்னவென்று தெரியாத வகையில் நடந்தமை கவலைக்குரியதாகும் ஜனநாயகம் முற்றாக நம் நாட்டில் அற்றுப்போய் விடவில்லை என்பதனால் போலும் ஆட்சியாளர்கள் சிலரின் வேண்டுகோளை நிராகரித்தனர்.

பட்டினசபை வேண்டாமென்று நாம் கூறியதாக சில விஷமிகள் பொய்ப்பிரசாரம் செய்தனர் ஆனால் உண்மை அதல்ல சட்டப்படி நடவடிக்கை எடுங்கள் ஒரு சிலரின் விருப்பு வெறுப்பிற்குச் சட்டத்தை விலை கூறாதீர்கள் என்று மட்டுமே நாம் கூறினோம் கரைச்சிப்பகுதிக்கு மக்கள் சர்வாதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கவில்லை. அவர்கள் அதை விரும்பவும் மாட்டார்கள். ஜனநாயக முறைப்படி ஏனைய பகுதிகளில் நடப்பதுபோல மக்களின் கருத்தையும் அறியுங்கள் என்றே சொன்னோம். 30 ஆண்டுகளாக வட்டாரம் புதிதாக பிரிக்கப்படாத சபைகள் நூற்றுக்கணக்காக இந் நாட்டில் இருக்க புதிதாக வட்டாரம் பிரித்து 1 மாதத்திற்குள் மீண்டும் வட்டாரப்பிரிவு வேண்டாமென்றே கூறினோமே தவிர விஷமிகள் கூறியது போலப் பட்டினசபைப் பிரச்சனையை நாம் முற்றாக எதிர்க்கவில்லை. இது தவறாயின் கரைசிப்பகுதி மக்கள் எம்மை மன்னிக்கட்டும் ஆனால் கரைச்சிப்பகுதி மக்களின் ஜனநாயக உரிமையை ஓரளவுக்கு பெரும் போராட்டம் நடத்தி காத்த பெருமை மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட கரைச்சிக் கிராம சபை உறுப்பினர்களேயே சாரும்.

எதிர்ச் சக்திகளின் தலையீடும், உபத்திரவமும் இல்லாதிருப்பின் நாம் கடந்த மூன்றாண்டுகாலத்தில் சாதித்திருக்கக்கூடியனவைபல. ஆனால் போட்டியும் பொருமையும் பெரியார்களிடம் குடிகொண்டிருக்கும்போது சாதாரண மக்களிடம் நாம் எதை எதிர்பார்க்கமுடியும். நாம் செய்யும் நற்சேவைகளை எல்லாம் பத்திரிகை அறிக்கைகள் மூலம்தமக்குப் பெருமை தேடியவர்களும் நம்மத்தியில் வாழத்தான் செய்கிறார்கள். அதையிட்டு நானே எமது சபையினரோ கவலையடையவில்லை ஆனால் பத்திரிகையில் அறிக்கை விடுவதுதான் சேவை என்று நினைப்பவர்களுக்கு உண்மையான சேவை என்றால் என்ன என்பதை இரவு பகலாக அயராது உழைத்து இப்பகுதி மக்களுக்கு சேவை செய்யும் எமது சபை உறுப்பினர்கள் போதித்துக்கொடுக்கத் தயாராக உள்ளனர்.

கிராமசபை மூலம் செய்யும் சேவை சுயநலமற்ற ஊதியமற்ற சேவை என்பதை பலர் உணரமாட்டார்கள். இதனால் நாம் அடையும் கஷ்ட துன்பங்களை நம்மோடு நெருங்கிப் பழகுபவர்களாலேயே உணரமுடியும். எதைச்செய்தினும் எத்தனை கஸ்டப்படினும் அதைக்கூடக் கண்டித்து தமக்கு செல்வாக்குத் தேடுபவர்கள் மானிடராகவே வாழத்தகுதியற்றவர்கள். தம்மைக் கொண்டு மற்றவர்களை எடை போடுபவர்களை நாம் மன்னிக்கத்தான் வேண்டும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் சேவையை சேவையாகவே செய்து வருகிறேன் என்பது உறுதியாகும்.

விஷமத்தனமாகவும் அற்பத்தனமாகவும் கீழ்த்தரமான பிரச்சாரம் செய்பவர்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன் சரியென எதை இச்சபை கருதுகிறதோ அதையே நாம் செய்து வருகின்றோம். நாம் செய்யும் ஒவ்வொரு வேலைக்கும் சபை அங்கத்தவர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் பொறுப்பாளியாகின்றனர். உண்மை இவ்வாறாக இருக்க தான் எதற்கும் பொறுப்பாளியல்ல என்று சபை உறுப்பினர்களில் யாரேனும் கூறியிருந்தால் அது சபையில் எதிர்க்கும் சக்தியற்ற அவருடைய கோழைத்தனத்தையே காட்டுகிறதென்பது உறுதி.

எமது சபையில் எதையும் நாம் ஒழித்து மறைத்து வைக்கவில்லை. சில விஷமிகளின் விஷமப் பிரச்சாரத்தை நம்பாமல் உண்மைமையை அறிய ஆவல் கொண்ட எவரேனும் எமது சபைக்கு வந்து எந்த தஸ்தாவேசுக்களையோ கடிதக்கோர்வைகளையோ பார்வையிட நான் அனுமதி வழங்கத் தயாராக உள்ளேன் என்று மகிழ்ச்சியோடு கூறிவைக்க விரும்புகின்றேன். எமது நிர்வாகத்தில் கரைச்சிப் பகுதி மக்களின் பணத்தில் ஒருசதமேனும் வீண் செலவு செய்யப்படவில்லை என்பதையும் பெருமையோடு கூறிவைக்க விரும்புகின்றேன்.

பல்லாண்டுகள் பாவனையற்றுக் கிடந்த ஓர் கட்டிடத்தை நாம் இப்பகுதிக்கே பெருமைதேடித் தரக்கூடிய வகையில் ஓர் நூல் நிலையமாக மாற்றி அமைத்தோம். ஆனால் நூல் நிலையத்திற்கென ஒதுக்கப்பட்ட பணம் சூறையாடப்பட்டதென தம்பட்டமடித்தவர்கள் இன்று முரசுமோட்டையில் கம்பீரமாக எழுந்து வரும் இச் சபையின் இரண்டாவது நூல் நிலையத்தைக்கண்டு தலைகுனிந்து நிற்கின்றனர். கரைச்சிப்பகுதியில் வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிக்கும், உருத்திரபுப் பகுதிக்கும் நம்மால் அமைக்கப்படவிருந்த வேறு இரு நூல் நிலையங்கள் தமது சுயநல நோக்காலும் சர்வாதிகாரப் போக்காலும் தமது அரசாங்கமென்ற மமதையாலும் தடைபட்டுவிட்டன என்பதை மட்டும் இப்பெரியார்கள் பொது மக்களுக்கு எடுத்துரைக்க மாட்டார்கள். ஆனால் காலம் இதற்கெல்லாம் பதில் கூறும்.

கடந்தகால நிர்வாகத்தினரின் திட்டத்தில் பரந்தன் பகுதிக்கு மின்சார வினியோகமில்லையென ஊர் அறியாது. பரந்தன் பகுதிக்கும் மின்சார வினியோகம் செய்த பெருமை எம்முடையதென, தூற்றுவதே கைதேர்ந்த கலையாகக் கொண்டவர்கள் எடுத்துரைக்க மாட்டார்கள். 1,70,000 ரூபா செலவில் உருவாக்கப்பட்ட மின்சார வினியோகத்தில், 1,00,000 ரூபா சூறையாடப்பட்டதென தம்பட்டமடித்த பெரியார்கள் எமது முழுத் திட்டத்திற்கும் மொத்தம் 90,000 ரூபா மட்டுமே செலவிடப் பட்டுள்ளதென அறிந்ததும் இன்று வெட்கி நிற்கின்றனர். "கெட்டிக்காரன் புழுகு எட்டு நாட்களுக்கு" என்ற முதுமொழிக் கிணங்க மக்கள் உண்மையை அறிகின்ற நேரத்தில் அவர்களின் நிலை எப்படியிருக்குமெனக் கற்பனை செய்து பார்த்து அதில் நாம் சாந்தியடைகிறோம்.

நாம் மூன்று ஆயுள்வேத வைத்திய சாலைகளை நடாத்துகிறோம். இந்நாட்டில் வேறு எப்பகுதியிலும் எந்த ஓர் கிராம சபையும் 3 வைத்திய சாலைகளை நடத்தவில்லை. வைத்தியசாலைகள் நமக்கு அவசியம்தானா? என்று பெரியார்கள் சிலர் கேட்டார்கள். அவர்களுக்கு தினம் மூன்று வைத்தியசாலைகளிலும் வைத்தியம் பெறும் 250க்கு மேற்பட்ட நோயாளர்களும் ஏழைத் தாய்மார்களும் குழந்தைகளும் பதில் சொல்லுவார்கள் இவ்வைத்தியசாலைகளை நடத்தியதன் பேரால் இச சபைக்கு வருடம் 28,000 ரூபா அரசாங்க நன்கொடை கிடைத்ததை மட்டும் இப்பெரியார்கள் பொதுமக்களுக்கு கூறமாட்டார்கள்.

பெரியார்களின் சின்னத்தனத்தைப் பற்றி நான் புத்தகம் எழுத வரவில்லை. மக்கள் உண்மையை உணரவேண்டுமென்ற நோக்குடனேயே சுருக்கமாக இவற்றைக் கூறிவைக்கின்றேன்.

இறுதியாக ஓர் வார்த்தை, மக்களே சிறந்த நீதிபதிகளென்ற காரணத்தினாலும் இப்பகுதியை ஆளும் பொறுப்பை நீங்களே எம்மிடம் ஒப்படைத்தமையினாலும் எம் ஆட்சியில் குற்றம் உண்டா இல்லையா என்பதை அறியும் உரிமை உங்களுக்கு உண்டு என்ற காரணத்தினாலும் எமது சபையின் நிர்வாக சம்பந்தமான எந்த உண்மையையும் அறியும் வாய்ப்பை உங்களுக்குத் தர தயாராகவுள்ளோம் என்று உறுதி அளிக்கின்றேன்.

கட்சி சார்பற்ற, அரசியல் கலப்பற்ற பாகுபாடற்ற, எல்லா உறுப்பினர்களின் ஒத்துழைப்போடும் ஓர் சிறந்த நிர்வாகத்தை இப்பகுதி என்றும் கண்டிராத வகையில் நடாத்த தகுதிவாய்ந்த நேர்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துதவிய கரைச்சிப்பகுதி மக்களுக்கு எனது நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.


வி. ஆனந்தசங்கரி,
அக்கிராசனர்

# உப அக்கிராசனரின் வாழ்த்து

ஆண்டு மாறுகின்றது, ஆட்சி மாறுகின்றது, ஆட்களே மாறுகின்றனர். மாற்றங்கள் பொதுவானவை தோற்றங்கள் உறுதியானவை. உறுதியான மாற்றம் என்று கூறக்கூடிய காலம் சென்ற ($\frac{1}{4}$) காலாண்டு என்று கையடித்துக் கூறலாம். சென்ற காலாண்டை மக்கள் மன்றம் மறந்திருக்காது, மறக்கவும் முடியாது. அப்படியான தொடர்பாட்சி நடாத்திய பெருமைக்குரிய ஆட்சிமன்றத்தை அமைக்க உதவிய மக்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டது எம் கிராம ஆட்சி மன்றம்.

ஆட்சியை ஆக்க உதவிய எனதருமை வாக்காளருக்கு ஆட்சிமன்ற மூலம் சேவைபல செய்தேன், தொடர்ந்து செய்வேன் என உறுதியான குறிக்கோளுடன் இவ்வாசியை வழங்குகின்றேன். ஆட்சி மன்றம் அரிய தொண்டாற்றி மக்கள் மத்தியில் தன் செல்வாக்கை ஒருபடி உயர்த்தியதென்ருல் அதனுல் மகிழ்ச்சி அடைவோர் அங்கத்தவராகிய உங்கள் தொண்டர்களல்ல மக்களாகிய நீங்களே உங்கள் தீர்ப்பை உதாசீனம் செய்ய முடியாமையால் வைத்திய உதவி - மின் உதவி முதலிய அத்தியாவசிய உதவியை ஆட்சிமன்றம் மக்கள் மன்றத்திற்கு தந்துதவியது பெருமைக்குரிய பெருமகனே... இதனுல் நீயும் உன்நாடும் இன்றல்ல என்றும் பெருமைப்படும். உங்கள் மகிழ்வே எம் மகிழ்வென மனதிற்கொண்டு 'இலக்கிய விழா'வை ஒழுங்கு செய்து கடந்த ஆண்டுகளில் தங்களுக்கு அளித்தோம். அதில் பங்குகொள்வதன்மூலம் ஓர் வளரும் சமுதாயத்தை உருவாக்க உதவியது ஆட்சி மன்றம் என்பது மிகையல்ல மன்றங்கள் தோன்றின - மன்னர்கள் தோன்றினர். விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அன்னைக்குலம் ஆசி ஈந்தது. தந்தைக் குலம் தலை வணங்கியது. இளைஞர் உலகம் ஈடுபாடு காட்டியது. கன்னியர் உலகம் கண்டு களித்தது. பொதுமக்கள் படை ஆட்சி பீடத்தை ஆதரித்தது. அதனுல் பலவற்றை நாம் செய்ய முடிந்தது. தொடர்ந்து செய்ய மன்றம் அனுமதிக்கும் என்ற இனிய நினைவு அலைகள்... தொடர்... தொடர் என்று தோளில் தட்டும்போது... எதனுல் இது என்று எண்ண அலையைத் தட்டிவிட்டால் காரணம் கலை என்பது வெள்ளிடைமலை. இலக்கிய மூலம் ஏற்பட்ட இவ்வினிய தொடர்பு... கலைபோல் வளர்ந்து மலைபோல் உயர வேண்டும். கமம் வளரட்டும், கலை வளரட்டும், வாழ்வு உயரட்டும் எனக்கூறி கரைச்சிக் கிராமசபையின் இலக்கிய விழாச் சிறப்பாயமைய வாழ்த்துகிறேன்.

இ. கிருஷ்ணராசா
உப அக்கிராசனர், கரைச்சிக் கிராமசபை



கரைச்சிக் கிராமசபை உப அக்கிராசனர்

திரு. இ. கிருஷ்ணராசா அவர்கள்



# கரைச்சிக் கிராமசபை பற்றி ஒருசில வார்த்தைகள்

பன்னிரண்டு வருடகால உள்ளூராட்சிச் சேவையில் ஒருவருட காலம் கரைச்சிக் கிராமசபையில் செயலாளராக சேவை செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வெய்துகிறேன்.

இக்குறுகிய காலத்துள் கரைச்சிக் கிராமசபை நிர்வாகத்தை அவதானிக்கும் போது கிராமசபையின் சேவைத் திட்டங்களும் செயல்களும் நான் இதுவரை எங்கும் கண்டிராதவகையில் துரித முன்னேற்றத்தையும் மக்களுக்கு பயனுள்ள ஆக்க வேலைகளையும் கொண்டதாக அமைந்திருப்பது நன்கு புலனாகின்றது.

இத்தகைய முன்னேற்றத்திற்குக் காரணம் கிராமசபை உறுப்பினர்களின் நேர்மையும் சிறந்த சேவை மனப்பான்மையும், மனப்பான்மைக்கேற்ப அக்கிராசனரை இச்சபை பெற்றிருப்பதுமேயாகும்

மக்கள் பிரச்சனைகளை நன்கு புரிந்துகொண்டு தங்களால் இயன்ற சேவைகளை முழுமனதுடன் செய்துவரும் கரைச்சிக் கிராமசபை அதன் ஊழியர்களைப் பொறுத்தவரை எதுவித குறையுமின்றி கண்ணியமாக நடத்தி வருவதும் கொடுக்கக்கூடிய உச்ச வரம்பு வேதனமும் ஏனைய சலுகைகளும் ஒவ்வொரு ஊழியர்களுக்கும் கொடுத்து வருவதும் போற்றுதற்குரியதும் ஏனைய சகல ஸ்தலஸ்தாபனங்களும் கரைச்சிக் கிராமசபையின் முன்மாதிரியைப் பார்த்து பின்பற்ற வேண்டிய சிறந்த முறையுமாகும்.

இக் கிராமசபையின் சிறந்த சேவைகளில், மூன்று இலவச ஆயுள்வேத வைத்தியசாலைகளைப் பரந்தன், வட்டக்கச்சி, உரித்திரபுரம் ஆகிய பகுதிகளில் அமைத்து கிராமப்புற மக்களுக்கு வைத்திய உதவி அளித்துவருவதும் கிளிநொச்சியில் ஓர் மத்திய நூலகத்தைத் திறந்து வைத்து கல்விப்பணி புரிந்துவருவதும் மற்றுமோர் நூல் நிலையத்தை முரசுமோட்டையில் அமைத்து வருவதும் கிளிநொச்சியில் சிறந்த ஓர் பஸ் நிலையத்தை அமைத்திருப்பதும், குறிப்பிடத்தக்க சிலவாகும்.

இச் சபையில் நிர்வாகப் பொறுப்பாளி என்ற முறையில் அக்கிராசனர் அங்கத்தவர்கள் ஊழியர்கள் அனைவரதும் ஒத்துழைப்பும் நேர்மையும் போற்றுதற்குரியதாகும். அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

கரைச்சிப்பகுதி மக்களுக்குத் தலையாய சேவைகளைச் செய்து வரும் கரைச்சிக் கிராமசபை 1965-ம் வருடத்திலிருந்து இலக்கிய விழாவை வருடா வருடம் தொடர்ந்து நடாத்திவருவதன்மூலம் இலக்கியப்பணியும் செய்துவருகிறது. கரைச்சிக் கிராமசபையின் பணி தொடர்ந்து நிலைக்க இறைவனை வேண்டுவோமாக.

ஆ. ஞானசேகரம்
செயலாளர், க. கி. சபை, கிளிநொச்சி

# வாசகர்களுக்கு ஓர் வார்த்தை!

சங்க காலத்தில் மூவேந்தர்களும், புலவர் பெருமக்களும் முத்தமிழையும் கண்ணைப்போலக் காத்து வளர்த்தார்கள் அதனுல் அன்றைய தமிழ்ச் சமுதாயம் கலைத்துறைகளில் பெரிதும் ஈடுபாடு உடையதாய் கலை கலாச்சாரம், பண்பாடு, அறிவுத்திறன் ஆகியவற்றில் மேம்பாடுற்று ஒப்பற்ற சமுதாயமாக விளங்கியதை இன்றும் நாம் பழைய இலக்கிய நூல்களிலும், இலக்கிய வரலாறுகளிலுமிருந்து காணக்கூடியதாக இருக்கிறது.

சங்க இலக்கியங்களுக்கும் அன்றைய அரசாட்சிக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்திருப்பது பண்டைய இலக்கியங்களை நாம் புரட்டும்போது நன்குதெளிவாகின்றது.

இலக்கிய விழா வெறும் கேளிக்கையுடன் நின்றுவிடும் நிகழ்ச்சியல்ல மனித இனத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம், அறிவு ஆகியவை மேன்மேலும் வளர்ந்து மக்களின் உள்ளங்களைப் பண்படுத்தி புதிய சீர்திருத்த, நாகரிக உலகைச் சிருட்டிப்பதற்கும், பரந்த உள்ளங்களை உருவாக்கி பரந்துபட்ட நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஆகியவை ஏற்படுவதற்கும் இலக்கிய விழா போன்ற நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுகின்றன.

கரைச்சிப் பகுதியின் சரித்திரத்திலேயே முதன் முதலாக இத்தலையாய பணியைச் செய்வதற்கு முன்வந்த பெருமை கரைச்சிக் கிராம சபையையே சாரும் 1965–ம் வருடம் முதன் முதலாக கரைச்சிக் கிராம சபையால் இலக்கிய விழா கொண்டாடப்பட்டதை யாவரும் அறிவார்கள். இவ்வருடம் கரைச்சிப்பகுதியின் பொற்காலம் எனக் கூறினும் மிகையாகாது. இதைத் தொடர்ந்து இற்றைவரை வருடாவருடம் இலக்கிய விழா வெகு விமரிசையாக நடைபெற்று வருவது கரைச்சிப்பகுதி மக்களுக்கு பெரியதோர் வரப்பிரசாதமும், மகிழ்ச்சிக்குரிய விடயமுமாகும். கடந்த மூன்று வருட காலமாக முத்தமிழையும் வளர்த்துவரும் எமது கிராமசபை இவ்வருடம் அதை மேலும் சிறப்பித்தற் பொருட்டு இவ் இலக்கிய விழா மலரை வெளியிடுகிறது.

மகிழ்ச்சிகரமான இவ் இலக்கிய விழாக் கொண்டாட்டத்தின் போது மக்களின் நலன் கருதி கலை நிகழ்ச்சிகளில் மிகுந்த ஆர்வம் காட்டி அயராது உழைத்து இவ்விழாவை முதன் முதலாக 1965-ம் ஆண்டில் ஆரம்பித்து வைத்த கரைச்சிக் கிராமசபை அக்கிராசனர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களுக்கு பொது மக்களின் சார்பில் எமது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இம்மலரின் சிறப்பு அம்சங்களை விமர்சித்து மலரை வாசிக்கும் உங்கள் ஆர்வத்திற்குத் தடைபோடாது மலரின் தரத்தையும், அது பற்றிய விமர்சனத்தையும் பொதுமக்களாகிய உங்களிடமே விட்டு விடுகிறோம். தொடர்ந்து இவ்விழா வருடாவருடம் நடைபெற வேண்டுமென இறைவனை வேண்டி விடைபெறுகிறோம்.

**இலக்கிய விழா மலர் ஆசிரியர் குழு**
கரைச்சிக் கிராம சபை,
**கிளிநொச்சி.**



மின்சார அத்தியட்சகர்
திரு P. J. அரசரெத்தினம்

# கிளிநொச்சியில் மின்சாரம்

கிளிநொச்சியில் மின்சாரம் என்னும் பேச்செடுக்கும்போது நாம் கிளிநொச்சியில் மின்சார விநியோகத்திற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்ட காலத்தை நோக்க வேண்டியுள்ளது. கிளிநொச்சி மின்சார விநியோக ஆரம்ப வேலை 1960-ம் ஆண்டு ஆரம்பமாகியது. அன்று இருந்த சபைத் தலைவரின் ஊக்கத்திலும் தற்பொழுதுள்ள தலைவர் அவர்களின் விடாமுயற்சியாலும் கிளிநொச்சி மக்கள் எப்போது வரும் என எதிர்பார்த்திருந்த ஆசை பூர்த்தி செய்யப்பட்டு சென்ற 16-7-67-ம் திகதி மாலை 7 மணியளவில் கிளிநொச்சி நகர் ஒளியுறச் செய்யப்பட்டது. அன்று கிளிநொச்சியின் பிரதான வீதி யாவரும் வியப்புறும்படி ஒளிமயமானது. இன்று மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு மாதங்கள் பூர்த்தியாகி விட்டன. பிரதான வீதி மேலும் மேலும் அதிக பிரகாசத்தைக் கொடுத்துக் கொண்டே யிருக்கின்றது. இன்று பல வீடுகளிலும், கடைகளிலும் மின் விளக்குகள் பிரகாசிக்கின்றன. தொடர்ந்து மின்சார விநியோக சேவை கரைச்சிக் கிராம சபையால் தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

முன்னர் பிற இடங்களிலிருந்து நாம் கிளிநொச்சியைப் பற்றி உரையாடிய பொழுது கிளிநொச்சி ஓர் காட்டுப் பகுதியாகவும் மிருகங்கள் விஷ அரவங்கள் நிறைந்த பகுதியாகவும் கதைத்துப் பயந்த நாட்களை தற்பொழுது மின்சாரம் துரத்தியடித்துக்கொண்டிருக்கின்றது. இன்னும் குறுகிய காலத்தில் கிளிநொச்சி யாழ்ப்பாணத்துடன் போட்டிபோடக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதற்கு ஐயம் வேண்டியதில்லை.

மின்சாரத்தின் உபயோகம் என்ன என்பதை எமது கிளிநொச்சிப் பகுதியில் நன்கு உணரமுடிகின்றது. எமது உணவுப் பகுதியில் பெரும் சாதனையை உண்டுபண்ணிய பெருமை

உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்
திரு. S. C. மாணிக்கவாசகர்
அவர்கள்
மீன்ராரர விநியோகத்தை
ஆரம்பித்து வைக்கிறார்,



மின்சார விநியோகத்
திறப்புவிழா வைபவம்



கிளிநொச்சிக்கே உரியது. அதிக நெற் கமங்களை கொண்ட இப்பகுதியில் கணக்கற்ற உழவுயந்திரங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது சுருங்கக்கூறின் மின்சாரம் கிளிநொச்சிப் பகுதியில் மேலும் அதிக பயிர்ச் செய்கைக்கு ஊக்கமளிக்கின்றது என்பதை இயந்திரங்கள் பழுதடையும் சமயத்தில் உணரக்கூடும்.

மின்சாரம் ஆரம்பிக்கப்பட்டு கரைச்சிக் கிராமசபை முதன்முறையாக மின்சாரத்தை இலக்கிய விழாவிற்குப் பயன்படுத்துவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இன்று கலைகளை வளர்ப்பதற்கு மின்சாரமும் உதவியளிக்கின்றது என்பதை ஆழ்ந்து யோசிக்கும்பொழுது உணரமுடியும்.

கரைச்சிப் பகுதி மக்களிடையே கரைச்சிக் கிராமசபை மேலதிகமான மின்சார வரியை அறவிடுவதாக அவநம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக அறியக்கிடக்கிறது. மக்கள் அவநம்பிக்கை ஏற்படக் காரணமுண்டு. ஆனல் அது எமது பிழையல்ல என்பதை இன்றைய மின் பொருட்களின் விலைவாசி எடுத்துக்கூறும். மக்கள் இந்த அறியாமையை அகற்றி மின்சார வினியோகத்தைப் பெற்று தங்கள் ஆசையை பூர்த்தி செய்து கிராமசபையுடன் ஒத்துழைத்து மேலும் மேலும் மின்சேவையை அபிவிருத்தி செய்ய ஊக்கமும் ஆக்கமும் தந்துதவுமாறு மின்சார அத்தியட்சகர் என்ற கோதாவில் அன்புடன் வேண்டுகிறேன்.

---


THIS SPACE DONATED

BY

**RAJAN IRON WORKS**

*Manufacturors of*

Gate, Grills, Shelters etc.

*in the North*

*Branch :*
Opposite Police Station
Anaikoddai.

*Office:*
8, Stanley Road,
Jaffna.

# இலக்கிய விழா எதற்கு?

சி. இராசகுலசிங்கம்
(காரியதரிசி இலக்கிய விழாப் பகுதி)

"இலக்கியக் கலை வளர தமிழ்மொழி வளரும்"

கரைச்சிப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து வந்து குடி கொண்ட நாம் எமது பழைய இலக்கிய கலாசாரத்தைப் பாதுகாப்பதன் மூலம் எமது உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். இத்துறையில் பணி புரிவதற்கு இலக்கிய விழாக்கள் இன்றியமையாதவை.

எமது நாட்டில் உள்ளூராட்சி மன்றங்கள் உற்பத்தியாகி இன்று பல ஆண்டுகளாகின்றன. கடந்த காலங்களில் வீதிகள் அமைப்பதும் கிணறுகள் கட்டுவதும் தான் தமது முக்கிய குறிக்கோளாக உள்ளூராட்சி மன்றங்கள் எண்ணியிருந்தன. ஆனல் தற்காலத்தில் ஒரு கிராமத்தின் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், விவசாயம், இயல், இசை, நாடகம், ஆதியாம் முன்னேற்றங்கள் யாவும் உள்ளூராட்சி மன்றங்களில் தங்கியுள்ளன என்பதை இப்பொழுது இலக்கிய விழாக்கள் கலை விழாக்கள் போன்ற விழாக்களைக் கொண்டாடும் உள்ளூராட்சி மன்றங்கள் நன்கு தெளிவுறுத்துகின்றன. மேற் கூறிய முன்னேற்றங்கள் யாவிலும் கரைச்சிக் கிராம சபை முன்னணியில் உள்ளது என்பதை கடந்தகால வரலாற்றிலிருந்து காணலாம். இவ் விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் பொது மக்கள் இம் மன்றங்களுடன் தொடர்பு கொண்டு பண்டைய இலக்கிய வரலாற்றுக் கலையைப் பேணிப் பாதுகாக்க பெரிதும் உதவியளிக்கப்படுகின்றார்கள். ஓர் உள்ளூராட்சி மன்றம் இப்படியான விழாக்களை எடுப்பதற்கு முதலில் நேர்மையும் நீதியும் அனுபவத்திறமையும் வாய்ந்த தலைவர்களும் அங்கத்தவர்களும் கிடைத்தல் வேண்டும். அது பொது மக்கள் கையில்தான் உள்ளது.

இலக்கிய விழாக்கள் பல விதமாகக் கொண்டாடப்படுகின்றன. சிறுவர், பாடசாலை மாணவ மாணவிகள் தங்கள் திறனுக்கேற்ப வருடாவருடம் இவ் இலக்கிய விழாக்களில் பாடசாலை மூலமாகவேனும், சமூக சங்கங்கள் மூலமாகவேனும் பங்கு கொண்டு சிறப்பிக்கப்படுகின்றன. வயது அடைந்த இளைஞர்களும் முதியோர்களும் தமது திறமையைக் காட்டுவதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடியதாக இவ் இலக்கிய விழா அமைகின்றது. எனவே இயல், இசை, நாடகம், ஆதியனவற்றில் தமக்குள்ள ஆற்றலை கரைச்சிப்பகுதியில் உள்ள மக்கள்

இவ் இலக்கிய விழாக்கள் மூலம் வெளிப்படுத்தவும் வளர்க்கவும் முன்வரவேண்டும். இத்திறமையை வெளிப்படுத்தி வளர்க்க ஊக்கமும் உதவியும் அழித்தல் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தின் கடமையாகும்.

இன்றைய சினிமா உலகம் பல்லாண்டு காலமாக உலகெல்லாம் போற்றி வந்த எமது இலக்கியத்தின் செம்மை உணர்வைப் பாழ்படுத்தி போதை ஊட்டும் பொருளாக மாற்றிவிட்டது. எமது இலக்கியங்கள் சிதைந்து சீரழிந்து போகும் இவ்வேளையிலாவது நன்மை தீமைகளை உணர்ந்து நாம் அனைவரும் ஒன்று திரண்டு எம் மத்தியில் செம்மை இலக்கிய உணர்வை புகுத்துவது எமது தலையாய கடமையாகும். இத்துறையில் உதவியளிப்பதற்கு கரைச்சிக் கிராமசபை சென்ற 1965-ம் ஆண்டிலிருந்து முன்னிற்பது கரைச்சிப்பகுதி மக்களின் பாக்கியமாகும். இவ் இலக்கியவிழாப் பணியை இந்நாட்டிலெல்லாம் பரவும் வகை செய்வதற்கு அரசாங்கமும் பொது நிலையங்களும் தனியார்களும் முன்வந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவவேண்டும் என்று இவ்வருட இலக்கியவிழா காரியதரிசி என்றவகையில் கேட்டுக் கொள்ளுகின்றேன். காதலாகிக் கசிந்து கடவுளடி சேர்ந்த பக்தர்கள் காட்டிச்சென்ற இலக்கியக் கலையை எம்மால் மறக்கமுடியாது. இம்மைக்கும் மறுமைக்கும் தூய கலையுணர்வே இன்றியமையாதது. ஆகவே மனிதர்களாகிய நாம் பொன் பொருள் நாடாது மெய்யுணர்வு தேடி கிராமங்கள் தோறும் இலக்கிய நிகழ்ச்சிகளை நடாத்தும்படி ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் எடுத்துக் கூறி அம்மன்றங்கள் மூலம் தூய இலக்கிய உணர்வைப் பரப்புவோமாக. இலக்கியவிழாக்கள் எதற்கு என்ற கேள்விக்கு இன்று இலக்கிய விழாக்களை எடுக்கும் கரைச்சிக் கிராமச்சபை போன்ற உள்ளூராட்சி மன்றங்கள் ஓர் முன்னோடியாகும்.

"வாழ்க கரைச்சிக் கிராமசபை, வளர்க இலக்கியக் கலையுணர்வு."

— —

# எமது நூலகம்

ச. முருகேசு (நூல் நிலைய பொறுப்பாளர்)

தைத் திங்கள் மாதக்கடைசி முப்பத்தோராம் நாள் கரைச்சிக் கிராம வரலாற்றில் ஒரு பொன்னுள் அன்று பலநாட்களாக எதிர் பார்க்கப்பட்டு இருந்த அறிவகம் திறக்கப்பட்டது சகல மக்களதும் அறிவுப் பசிக்கு நல்விருந்து அளிக்க கரைச்சிக் கிராமசபை முன் வந்தது. இச் சேவையின் மூலம் காலத்தாலும் கருத்து மாற்றத்தாலும் அழிக்கமுடியாத, மாற்றக் கூடாத மகத்தான தனி இடத்தைப் பெற்று அணையா அகல் விளக்காக ஒளி கால்கிறது இன்றைய சபை.

குடாநாட்டில் கிராமச் சபைகள் நடத்திவரும் நூலகங்களில் விழுமியது எம் நூலகமே. ஏறத்தாள பத்தாயிரம் ரூபா வரை பெறுமதியான அறிவு மிக்க நூல்களையெல்லாம் தன்னகத்தே அடக்கியுள்ளது இந்த மத்திய நூலகம். யாழ். பொது நூலகத் தமிழ்ப் பிரிவுடன் இந்நூலகமும் சரிநிகராக தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய நிலையை முதல் ஆண்டிலேயே ஏற்படுத்திய பெருமை எம் சபைத் தலைவரின் திறமைக்கோர் அணியாகும்.

தினமும் நூற்றுக்கணக்கான வாசகர்கள் வந்து நீண்ட நேரம் அலுக்காது உட்கார்ந்து பலதுறை நூல்களையும் ஆராய்ந்து அறிவு பெற்றுத் திரும்புகின்றனர். கலை, இலக்கியம், வரலாறு, புவியியல், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற எல்லா நுண்கலை நூல்களும் நிறையப் பெற்றது இந் நூலகம். அதனுல் பாலர் கழகம் தொடங்கிப் பல்கலைக்கழகம் வரை தேவையான பாடநூல்களைப் பெற்று அறிவு வளர்க்க மாணவர் குழாமே தினமும் நூலகம் வந்து தம் தேவைகளைப் பூர்த்தி செய்து திரும்புகின்றனர். மாணவர் கூட்டம் புத்தகச் சாலையை பாடசாலை என எண்ணும் படியாக நமது நூலகம் அமைந்துள்ளது.

அத்துடன் நின்றுவிடாது பாலர் போற்றும் பாப்பாக் கதைகளும், சிறந்த வரலாற்று நாவல்களும், இலக்கிய, இதிகாச, கவிதை நூல்களும், சிந்தனையை ஊக்கும் அறிவுக் கட்டுரைகளும், உலகம் புகழும் சிந்தனையாளரின் சிறந்த படைப்புகள், மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர் போன்ருேரின் மிகப்பெரிய வரலாற்றுத் தொகுப்புகளும் எம் நூலகத்தை அணி செய்கின்றன.

மேலும் பொழுதுபோக்கும் துப்பறியும் நாவல்கள், சமையல், தையல், சோதிட நூல்கள் அனைத்தையும் நிறையப்பெற்று பலதுறை வாசகர்களது ஆவலையும் பூர்த்தி செய்து நிற்கிறது. நமது நூலகம் பாமரர்



கிளிநொச்சி மத்திய நூல்நிலையத்தை திறந்து வைத்தபின்
உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளரால் திபமேற்றி வைக்கப்படுகிறது.



கிளிநொச்சி மத்திய நூல்நிலையத் திறப்பு விழாவின்போது
உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் உரை நிகழ்த்துகிறார்.

பண்டிதர் பலதிறத்தாரையும் எளிதிற் கவர்ந்து இழுக்கும் காந்தசக்தி மத்திய நூலகத்திற்கு உண்டு. இந் நூலக அமைப்பு கரைச்சிக் கிராமச் சபையின் நிர்வாகத் திறமைக்கோர் எடுத்துக்காட்டு.

அடுத்து நூலக நிர்வாகம் பற்றி அறிந்து கொள்வோம். நூலகத்தில் அங்கம் வகிப்போர் மிகக் குறைந்த கட்டுப்பாடுகளோடு பெரும் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது அங்கத்தவர்கள் மட்டுமன்றி வாசகர்களின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து தீர்க்கும்பணி செவ்வனே நடைபெறும் வண்ணம் கவனம் செலுத்தப்படுகின்றது.

மிகப் பரந்த கரைச்சிப் பிரிவின் நெற்றியில் திலகமென மிளிர்கிறது 'கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள நூல்நிலையம்.' பொது மக்களின் வசதியை முன்னிட்டு இந்நிலயத்தில் சகல சௌகரியங்களுடனும் காற்றோட்ட வசதியுடனும் நீண்டு நிமிர்ந்து நிற்கிறது எமது நூல் அகம். நூலக முகப்பில் வாசகர்களின் இலயக்கிய விமர்சனங்களும், அறிவு விவாதங்களும் எந்நேரமும் நடைபெறுவது மக்களின் அறிவுப் பசிக்கு ஏற்ற விருந்து கிடைத்துள்ளது என்பதற்குச் சான்றாகும். கலாச்சார ஊடுருவல் மூலம் இந் நாட்டின் இளம் உள்ளங்களில் பதிந்திருந்த ஒரு சில இலக்கிய கர்த்தாக்களின் சுய ரூபங்களை அறியத்தந்த பெருமை இந் நூலகத்தினுடையதே. ஈழத்து இலக்கியப் படைப்புக்களை இப்பகுதி மக்களின் நல்விருந்தில் நன்றாகக் கலந்து சுவைபடச் செய்து எமது தேசிய தமிழ்க்கதாசிரியர்களின் புகழையும் ஓங்கச்செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவது போற்றத் தக்கதே.

முரசுமோட்டையில் இதே போன்ற மற்றொரு நூலகத்தை நிறுவுவதற்கு இச்சபை ஏற்ற ஒழுங்குகள் செய்து வருகின்றது. அறிவுவளர்ச்சிக்கும் கலைவளர்ச்சிக்கும் இச் சபை செய்யும் சேவையைப் போற்றாதிருக்க முடியுமா? கடைசியாக இப்பகுதி மக்களின் அறிவுப்பசி போக்கிய ஆசானாகவும் சபைத்தலைவராகவும் பணிபுரியும் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களின் சேவைக்காலம் கரைச்சியின் பொற்காலமே.

நன்றி

# எம்கடன் பணிசெய்து கிடப்பதே


சி. வ. மாசிலாமணி D. A. M.
(உருத்திரபுரம் வைத்தியசாலை, உருத்திரபுரம்)

பணி என்னும் இச்சிறிய சொல்லில் பரந்து விரிந்த பல விடயங்கள் அடங்கியுள்ளன. அவை சமூகப்பணி, கலைப்பணி, இறைப்பணி, போன்ற பல பணிகளாகும். இவற்றுள் இறைப்பணிபுரிந்த தாயுமான சுவாமிகள், சமூகப் பணியாற்றிய பரராசசேகர மன்னன், கலைப்பணி புரிந்து கலைவாணிக்கே தம்மைச் சொந்தமாக்கிக் கொண்ட கலைத் தொண்டர்கள், போன்ற இன்னோரன்ன பலர் நம்மத்தியில் வாழ்ந்தார்கள் என்று கூறிப் பெருமை கொள்ளுகின்றோம்.

ஆனால் இன்று நம்மத்தியிற் பரந்த பல சேவைகளைப் புரிந்து வரும் பொது ஸ்தாபனங்கள், சங்கங்கள் எத்தனையோ பல தோன்றியுள்ளன. இன் நிலையில் நிலையான சேவைகளைச் செய்யவும் ஸ்தாபனங்கள் எவை சங்கங்களின் பெயரில் வயிறு வளர்க்கும் சபைகள் எத்தனை என்பதை அறிவது மிகச்சுலபம். ஜனநாயக சகாப்தமாகிய இவ் இருபதாம் நூற்றாண்டில், அணுயுகத்தில் மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டனர். முன்னேற்றத்தின் முடிவையே தாண்டிவிட்டனர் என்று முற்றாகக் கூறுவதற்கில்லை. வாழவழியற்று வனாந்தரங்களிற் தவிப்போரும், உண்ண உணவின்றி, உயிரிற்கே ஊசலாடுவோரும், இருக்க இருப்பிடமின்றித் திகைத்துக் குடியேற்றத் திட்டங்களை நாடி வருவோருமாக உள்ள பலரும், இன்றும் நம் மத்தியில் வாழ்கின்றார்கள் என்பதை மறுக்கமுடியாது.

முற்கூறிய மூன்று பகுதியினரில் மூன்றாமவராகிய குடியேற்றத் திட்ட வாசிகளால் வழம்படுத்தப்பட்டு, சென்நெல் கொழிக்கும் நன்செய் நிலமாக, ஏன்! இலங்கையின் விளைச்சல் கூடிய பகுதிகளில் ஒன்றாகத் திகழ்வது நம் கரைச்சிப் பகுதி என்று கூறும்போது நாம் பெருமிதம் கொள்ளாமல் இருக்க முடியாது. ஆனால் இலங்கையின் உணவுற்பத்தியிற் பெரும்பகுதியை அளிக்கும் இப்பகுதி மக்களின் வாழ்க்கை, சுகாதாரம், வைத்திய வசதி, போக்குவரத்து போன்றவற்றைப் பார்ப்போர் மனது புண்படும் வகையிலேயே சென்றகாலம் அமைந்திருந்தது எனலாம்.

இன் நிலையில் வசதியற்று வாழ்ந்த மக்களுக்கு ஓர் வரப்பிர



கரைச்கிக் கிராம சபையின் உருத்திரபுரம் வைத்தியசாலையில்
நோயாளி ஒருவர் சிகிச்சை பெறுகிருர்.



வட்டக்கச்சி வைத்தியசாலையை
உபஅக்கிராசனர் திரு. இ. கிருஷ்ணராசா திறந்து வைக்கிருர்.

சாதமாக அமைந்ததே கரைச்சிக் கிராமசபை. இச்சபையை நம்பி வாழ்ந்த பலரையும், இச்சபைக் காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த சிலரையும் இக்கிராமசபையின் வரலாறு எமக்கு எடுத்துக்காட்டியுள்ளது. இந் நிலையில் இன்றைய நம் கிராமசபையின் உறுப்பினர்களும் சேவைக்குரிய அக்கிராசினரும் குறுகிய காலத்தில் இப்பகுதி மக்களுக்கு ஆற்றிய பணிகள் பல. அவற்றுள் கரைச்சிக் கிராமசபையால் ஸ்தாபிக்கப்பட்ட இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளும், பாலர்களுக்கான பால்மா வினியோகமும் முக்கிய இடம் பெறக்கூடியவற்றுட் சில.

அன்று பரராசசேகர மன்னன் காலத்திற் கிராமந்தோறும் இலவச மருத்துவ மனைகளும், தாதியரும் இலவச தேன் வினியோகத்தோடு கூடிய வைத்திய வசதிகளும் அளிக்கப்பட்டதை நாம் வரலாற்றுவாயிலாக அறியக் கிடக்கின்றது. ஆனால் இன்று அன்றைய பரராசசேகர மன்னனையும் அவர் தம் மந்திரிகளையும் நினைவு கூரும் வகையில் அமைந்ததே இன்றைய நம் கரைச்சிக் கிராமசபையாகும். ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்கள் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளை நிறுவவில்லையா? என்று பலர் கேட்கக் கூடும். அதை நாம் மறுக்கவில்லை ஆனால் ஈழத்தின் எப்பகுதியிலுமுள்ள உள்ளூராட்சி ஸ்தாபனங்களும், மேற்கொள்ள முடியாத வகையில் ஒரேகிராமசபை மூன்று இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளை நடாத்துவதை இங்கு மட்டுமே காணமுடியும். பரந்தன், வட்டக்கச்சி, உருத்திரபுரம் ஆகிய மூன்று வைத்தியசாலைகளின் மூலமும் நாளொன்றிற்குச் சராசரியாக இருநூற்றைம்பது (250) க்கு மேற்பட்ட நோயாளர்கள் வைத்திய உதவி பெறுகின்றார்கள். இதனால் மக்களின் போக்குவரத்து வசதியீனங்கள் செலவினங்கள் யாவும் குறைந்திருப்பதை மறுக்க முடியாது. வருடமொன்றிற்கு பல ஆயிரம் ரூபாக்கள் பெறுமதியான மருந்து வகைகளையும் சிறுவற்குரிய தைல வகைகளையும் எமது வைத்தியசாலை பொதுமக்களுக்கு அளித்து. வருகிறது அரசாங்கவைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை இது வரை எமது வைத்தியசாலைகளிற் கண்டிருக்க முடியாது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று கூறிய நம் மூதாதையோரின் உண்மையான கூற்றிற்கிணங்க நம்பகுதி ஏழை மக்களை வாழவைக்க வந்த இக்கிராமசபை ''பசிப்பிணி மருத்துவனில்லம் அணித்தோ சேயதோ'' என்று அலைந்த பாலகர்கள் பலருக்குப் பல ஆயிரம் ரூபாய் செலவிற் பால்மா வினியோகம் நடைபெறுவது யாவரும் அறிந்த ஒன்று. குமண வள்ளல் காலத்தில் இருந்தது போற் பசிப்பிணியால் வாடித் தாய் முகம் நோக்கும் குழவிகளோ, இதைக்கண்டு செய்வழியறியாது திகைத்துக் கணவன் முகம் நோக்கும் மனைவிகளோ இன்று இல்லையென்னும் வகையில் நம் கிராமசபையினர் பால்மா வினியோ

கத்தை விஸ்த்தரித்து வருகின்றனர். இச்செயல் போற்றுதற்குரியதாகும். '' தனியொருவனுக்கு உணவில்லையெனில் இவ் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று கூறிய புதுமைக்கவி பாரதியின் கூற்றை எமது கிராமசபையினர் குழந்தைகள் விடையத்திலும் கடைப்பிடிக்க முற்பட்டதைச் சிந்திக்கும் திறன் படைத்த எவரும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இப்பகுதி மக்கள் பலரின் பாராட்டுதலுக்குப் பாத்திரமாகி ''எம்கடன் பணி செய்து கிடப்பதே'' என்று வாழ்ந்துவரும் இச்சபை உறுப்பினர்களும் சேவைக்குரிய அக்கிராசனர் அவர்களும் கரைச்சிப்பகுதி மக்களின் உள்ளங்களினின்று என்றும் நீங்கா இடம் பெற்றுவிட்டனர்.

வாழ்க இக்கிராமசபை!
வளர்க அதன் சேவை!!

வணக்கம்

---

# கிளிநொச்சியும் இளைஞர் சமுதாயமும்

சு. சிவப்பிரகாசம்
(ப. இ. கு. திட்டம் திருவையாறு கிளிநொச்சி)

இயற்கை வளம் படைத்திட்ட கிளிநொச்சி, எழில் மிகு கோலங்களின் எடுத்துக்காட்டு. காட்டைக் கழனியாக்கி, மேட்டைப் பசும் சோலையாக்கி, இயற்கையுடன் செயற்கை போட்டிபோடுமளவிற்கு, மனித சக்தியின் சாதனை சரித்திரம் வகுத்து விட்டது.

மரகதப்பச்சையென நெற்பயிர்கள் பார்ப்போர் உள்ளங்களை பரவசப்படுத்தும் காட்சிகளாகும். பருவமாகிவிட்ட பெண்போல், பருவமடைந்துவிட்ட நெல் எனும் நல்லாள் நாணிச்சிவந்து நன்நிலம் நோக்கும் காட்சி, கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தான கடலோவென ஐயுறும் இரணைமடு வாவியும், மற்றும் குளங்களும் கரைச்சிப்பகுதிக்கே இரத்தச் சுற்றோட்டம்போல்வன. நீச்சல் தடாக நிகர் கிளிநொச்சிக் குளம் அப்பகுதி மாந்தர்க்கு மாணிக்க கங்கை. இலங்கையென்ற உடலின் முள்ளந்தண்டுக் கொடி போல் நெடியசாலையாகிய



அக்கிராசனரும் கரைச்சி கிராமசபை ஊழியர்களும்.



1966-ல் நடந்த இலக்கிய விழாவின்
பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற
செல்வன் மா. கணபதிப்பிள்ளை
ஸ்ரார் நாடக மன்றம்



1966-ல் நடந்த இலக்கிய விழாவின்
பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற
மாணவன் க. இலகுப்பிள்ளை
இந்து த. க. பாடசாலை கிளிநொச்சி

கண்டி வீதியும், இரண்டு பக்கங்களிலும் வியாபார நிலையங்களும் பல குடியேற்றத் திட்டங்களை ஒட்டவைக்கும் போக்குவரத்தும் இந்நாட்டின் மின்வேக வளர்ச்சிக்கு ஓர் காரணம். அஞ்சல் பகுதி, கிருஷிகம் காணிப்பகுதி, பொலிஸ், நீர்ப்பாசனம், கிராமசபை, காரியாதிகாரி கந்தோர் ஆகிய பல அலுவலகங்கள் இப்பகுதி மாந்தர்க்குச் சிறந்த சேவையாற்றுகின்றன. கருணை நிலையம், கிருஷிகப் பாடசாலை, காந்தி நிலையம், குருகுல பாடசாலை ஆகிய பயிர்ச்சி நிலையங்கள், ஒழுக்கம் தொழில் என்பவற்றை கற்பித்து தன்மானம், தன் நம்பிக்கையோடு வாழ வழி வகுக்கின்றன.

கிளிநொச்சிப் பகுதியை குடியேற்ற வட்டாரங்களைக் கொண்ட கரைச்சிக் கிராமசபையின் சிறந்த நிர்வாகமும் புனரமைப்புகளும், புது அமைப்புகளும் வடமாகாணத்தின் இரண்டாம் நகரமாக ஆக்கிக் கொண்டுவருகின்றது. இருள் சூழ்ந்த கிளிநொச்சியில் தேன் நிலவாக ஒளி பரப்பி இரவைப் பகலாக்கும் மின் வெளிச்சம் கிராமசபையின் நன்முயற்சியாலே கிடைத்தது

அறிவுக்கு உணவின்றி அறிவுப் பசியால் அல்லல்பட்ட எமக்கு பொதுசன நூல் நிலையம் பெருவிருந்தாய் அமைந்து விட்டது. கரைச்சிக் கிராமசபையினர் மந்தைப்பட்டிபோல் காட்சியளித்த சந்தையை விஸ்தரித்து பல வசதியோடு அமைந்த சந்தையாக அமைத்துக் கொடுத்துள்ளனர் சகதி நிறைந்தபாதைகள் பல சிறந்த சாலைகளாக மாறியுள்ளன. கிராமசபையின் மகத்தான சேவைகளில் போற்றுதற்குரியது அதன் ஆக்க வேலைகளேயாகும்

எமது கரைச்சிப்பகுதி மக்கள் உழைப்பதற்குத் தகுந்தாற்போல் அனுபவிப்பதில்லை. உழைப்பு ஒரு இனத்தின் தலையிலும் ஊதியம் ஓர் இனத்தின் வாழ்விலும் போய் சேருகிறது. உழைப்பால் களைப்படைந்தோற்கும் உல்லாசம் தேடுவோற்கும் பூந்தோட்டம் மிகவும் வேண்டியதொன்று. கலை நிகழ்ச்சிகள் நடாத்திக் களிப்புற ஸ்ரேடியம், உல்லாசப் பிரயாணிகள் வந்து தங்க (Rest House) ஓய்வு விடுதியும் அமைத்தல் வேண்டும், பணம் படைத்த பலர் நாட்டுவாலிபரின் ஏக்கம் போக்க தொழிற்சாலை நிறுவனங்களை ஏற்படுத்தலாம். கள்ளுக்கடை விஸ்தரிப்புகளை ஒறுத்து, பாற் சாலைகள் ஏற்படுத்தலாம். மின்தறி நெசவு நிலையம் அமைப்பின் நம் நாட்டில் வேலையற்றிருக்கும் பெண்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும். பொதுசன நூல் நிலையத்திற்குப் பணமாகவோ புத்தகங்களாகவோ கொடுத்து அவற்றை மேலும் விஸ்தரிக்கலாம். ஒவ்வொரு தனி மனிதனின் முற்போக்கு எண்ணம், பேச்சு செயல் என்பவற்றால்தான் அந்நாட்டின் வளர்ச்சி மேம்படும். அறியாமை இருள் அகலும் அறிவையும், பொருளாதாரத்தையும் அனுபவிப்பவனே முழு மனிதன். அறிவு நிரம்ப உயர்கல்விக் கூடங்கள் நம் மத்தியில் தோற்றவேண்டும். விவசாயம் பெருக விவசாய சாதனங்கள் இலகுவில் கிடைக்கக்கூடிய வசதிகள் வேண்டும். தரகு முறை ஒழிய வேண்டும். கூட்டுறவுச்சங்கங்கள் கொள்வனவு விற்பனவுகளில் மிகுந்த சிரத்தையுடன் கருமமாற்றல் வேண்டும். தேசிய உணர்ச்சி ஒவ்வொரு உள்ளங்களிலும் ஒளிவிடவேண்டும்.

ஒவ்வொரு நாட்டின் எதிர்கால உயர்வும் தாழ்வும் இளைஞர்களின் அறிவிலும் செயலிலுமே தங்கியுள்ளது. நகரங்களில் வாழும் இளைஞர்கள் உடலுழைப்பு அதிலும் விவசாயம் கேவலம் என்ற நினைவில் வாழுகின்றனர். கிராமத்தானின் உழைப்புத்தான் பட்டினத்திற்கு வகை வகையாக வருகின்றது என்பதை அவர்கள் உணர்வதில்லை.

ஆங்கிலேயன் விட்டுச் சென்ற துரைத் தனத்தின் எச்ச சொச்சமாக தம்மை ஆக்கிக் கொண்டு வீதிக்கு வீதி அலைவதில் இன்பம் காணுகின்றனர். பிறநாட்டவனிடம் கையேந்தி நிற்பதும், பஞ்சத்தில் மிஞ்சிவிட்டோமென ஆகாசவாணியில் ஒலிபரப்பப்படும் நிலைவரைக்கும் இவர்களின் போக்கற்றதன்மையாலே! நாடு நலிவுற்றதும் நற்பண்புகள் தாழ்ந்ததும் கடைமையைக் கடைப்பிடிக்காத காரணத்தாலே மேல்நாட்டில் படித்தவன் பட்டம் பெற்றவன், பண்ணை, தொழிற்சாலை என்பன அமைக்கிறான். இங்கு படித்தவன், பட்டம் பெற்றவன் பல படிகள் ஏறிஇறங்கி அலைகிறான். "பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் பிறர்பங்கைத் திருடேல் வேண்டாம்" என்று பாரதி கூறியபடி இன்று திருவையாறு, விசுவமடு போன்ற பல படித்த குடியேற்றத் திட்டங்களில் படித்த இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அச்சமும் அடிமைத்துயரும் இவர்கள் வாழ்வில் இல்லை, நாகரிகத்திற்கும் நற்பண்புக்கும் குறைவில்லை. இவர்களின் வாழ்க்கையை, தேசிய சேவையை பல நகர இளைஞர்களும் பின்பற்றின் அமெரிக்கா, ரூசியா போன்று மண்ணையும் விண்ணையும் சாடுவோம். நாட்டின் பிற்போக்குச் சக்திகள் எழுச்சியுறும் இளைஞர் சமுதாயத்தின் கால்களுக்கு படிக்கல்லாகட்டும். வீட்டின் பொருளாதாரம் நாட்டின் பொருளாதாரம். நம் உண்மை வாழ்க்கை நாட்டின் உயர்வாழ்க்கை. நம்நாட்டு விவசாயிகள் நாம் தொழும் தெய்வங்கள். உழைக்கும் நிலையங்கள் நாம் அமைக்கும் கோயில்கள், விவசாயம் குடியேற்றம் மக்கள் வாழ்வை உயர்த்தும் முன்னேற்றம். செம்மையான அரசியல் அமைப்பு சிறந்த தொண்டர்களின் படைப்பு அதுவே நாம் விரும்பும் நாடு. இளைஞர் அமைக்கும் வரலாற்று ஏடு.

---


**N. V. KANDIAH & SONS**

**JEWELLERS**

**நா. வ. கந்தையா அன் சன்ஸ்**

நகை வியாபாரிகள்

**76/1 & 2, கஸ்தூரியார் வீதி**

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 500

# ஏழைத் தியாகிகள்

சு. சிவப்பிரகாசம்

இன்று பரந்த உலகமே பாட்டாளியின் உழைப்பால் விஞ்ஞான உலகமாகி விட்டது. அவனது உழைப்பின் உறுதியால் புது உலகம் உருவாகி விட்ட வேளையில் அவனது சிந்தனை கஞ்சியும் கந்தையுமின்றி, கடைத் தெருவிலும், நடைத் தெருவிலும், நாதியற்ற நடைப்பிணமாய் அலைகின்றது. உழைப்பாளிகள் உண்ணுவதற்கு வகையற்று – உயிரையும் உடலையும் – ஒட்டவைப்பதற்கு அவர்கள் படும் பாடுதான் என்னே! பாட்டாளி வர்க்கம் ஊரிலே வாழாது உழும் வயலிலும், கடலிலும் காட்டிலும் இயற்கையோடு போராடி மண்ணும் தண்ணீரும் உண்ணுமளவற்கு வாடி வதங்கி – வயிரொட்டி – வாழ்வை வெறுத்து தன் இன்பத்தையும் ஏன்? உயிரையும் கூடத்தானம் செய்து விடுகின்றனர். இடுப்பிலே அழுக்குக் கந்தையுடுத்தி ஆகாயத்தை கூரையாக்கிய குடிசையிலே! சூரிய சந்திரனை விளக்காக்கி தரையைப் பாயாக்கி, பருவ உணர்வை பசியுணர்வாக்கி – மைந்தர்களின் அழுகைக் குரலை மதுரகீதமென வாழும் வாழ்க்கையிலும், உலகமக்களுக்குத் தொண்டு செய்ய முன்வருகின்ருன் தொழிலாளி. உலகச் சந்தையோடு போட்டி போடுமளவிற்கு பொன் கொளிக்கவைத்த பொருளாதார சிருஷ்டிகள் (தோட்டத் தொழிலாளர்) தொழிலின் கர்த்தாக்களென்ற பெயரிழந்து – தோற்றமிழந்து – அல்லற் படுமளவிற்கு, பைத்தியங்களாய், அனுதைகளாய் –நடைப்பிணங்களாய், சென்றவிடமெல்லாம் நிந்தனை பெற்று, சாய்ந்து சவமாய் சாக்கடையில் விழுந்து கிடைப்பதைப் பாருங்கள். பால் வடியும் முகம் கொண்ட பச்சைப் பாலகர்கள் கடற்கரையில் கொழுத்தும் வெயில் ஊணற்ற உருவங்கள் போன்று உருக்குலைவு நிலையிலும் உண்டு கொழுக்கும் வர்க்கத்துக்காக வலியெடுக்க வலையிழுக்கும் காட்சியும், திருகோணமலையிலே கப்பற்றுறையிலே கொட்டிய சீமேந்து கூட்டிக்குவிக்கும் சிறூர்களும் ஹோட்டல்களிலும் வீடுகளிலும் குற்றேவல் செய்யும் குழவிகளும், தொந்திப் பரம்பரையை உல்லாச வாழ்வு வாழவைக்கும் இளம் ஏழைத்தியாகிகளாவார்கள் என்பதை நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

மனித ரத்தத்தைக் குடித்துக் கொழுக்கும், சுரண்டும் வர்க்கம் ஒரு இனம். உழைத்துத் தொழி

வின் கௌரவத்தை நிலைநாட்டும் பாட்டாளி வர்க்கம் ஒரு இனம். இரண்டு இனத்துக்கும் சமத்துவம் சகோதரத்துவம் என்பன நீண்ட தூரங்கள். மனிதனை மனிதன் நன்குணர்ந்து நாமெல்லாம் ஒரே மண் கொண்டு செய்த பாண்டங்கள் என்ற மனப்பான்மை வளரும் வரையும் ஏற்றத் தாழ்வுகள் முடிவுறப்போவதில்லை. நாட்டு வாலிபர்கள் ஏக்கம் பிடித்தலைகின்றனர். கற்றுதனுலாய பயன் காற்சட்டையும், கண்ணுடியுமா? கற்றதன் பயன் கஞ்சிக்கலைவதா? மேலை நாட்டில் பட்டம் பெற்றபின் பண்ணையமைக்கிறுன். நம் நாட்டவன் பட்டம் பெற்ருல் பல படிகள் ஏறி இறங்கிறுன். அங்கு தொழிலால் பெருமை, உயர்ச்சி இங்கு வரட்டுக் கௌரவத்தால் வறுமை, வீழ்ச்சி. பியோன் வேலை பார்க்கும் ஒருவனுக்குக் கொடுக்கும் சீதனத்தை இருபத்தைந்து ஏக்கர் கொண்ட விவசாயிக்கு கொடுக்க மாட்டார்கள். இதிலிருந்து நமது நாட்டவர்களின் எண்ணங்களும் தொழிலைத் தரம்போடும் முறையும் அரண்மனைச் சம்பளத்துக்குக்கொடுக்கும் மதிப்பும் நன்கு தெரிகிறது. இதனுல் பாட்டாளி பரம்பரைப் பாட்டாளியாகிறுன். அவனுக்கு உயர்வில்லை, வாழ்வு இல்லை – வளமில்லை கட்சியமைத்து அமைச்சுக்குச் செல்வோர் தேர்தல் உறுதிகளெல்லாம் பின் தெருவிலே விடுகின்றனர். வீடமைப்போம் – விவசாயவசதிசெய்வோம், வீதியமைப்போம், வீதிக்கு வெளிச்சங்கொடுப்போம், உடை கொடுப்போம் – உண்ண வகைகள் செய்வோம், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒளிப்போம் என்றவர்கள் இன்று கறுவாக்காட்டு உல்லாச வாழ்விலும் ''கால்பேஸ்'' கொட்டலிலும் குழு குழு சீதளச் சுவாத்திய பங்களாக்களிலும் இன்பமென்று கண்டதெல்லாம் சொந்தமென்று மாழ வழி வகுத்ததுதான் கண்ட பயன். ஏழைகள், அங்கவீனர்கள் நாட்டிலே நாதியற்று நடுத்தெருவில் அலைய, சின்னமேளமென்று சொல்லும் நாட்டிய மேளத்திற்கும் சிகரங்களென்றும் வாண விளையாட்டு என்றும், ஆலயத்தை அசுத்தமாக்கி, ஆயிரக்கணக்கில் அள்ளி வீசும் அறியாமையை எண்ணிப் பார்த்தார்களா? ஏழைச் சிறுவர் பாலின்றி பரிதவிக்க கிளப்புகளில் குடித்துக் கூத்தடிக்கும் பிரம்மாசிருஷ்டிகள் ஒரு நிமிடமேனும் எண்ணியதுண்டா? கழுத்துத்தசை கன்னத்தில் அடிபட, தொந்திதொடையை மருவ உருப்பிக்கொழுக்கும் ஊதாரிகள் முன்ளெலும்புவரை வயிறு ஒட்டி தேய்ந்த அம்பி போன்று கன்னம் இடிந்து, கண்கள் குழிவிழுந்து, சவக்களை சொட்ட தரித்திரத்தின் பிடியில் திரியும் ஏழைத் தியாகிகளை எண்ணிப் பார்த்ததுண்டா?

பாட்டாளி வர்க்கம் உழைத்ததை அனுபவித்தார்களா? இல்லை. வீடுகட்டும் பாட்டாளி வீதியிலே தூங்குகிறுன். உணவு ஆக்குவோன் கஞ்சிக்கு அலைகிறுன். ஆடை நெய்வோன் கட்டுவது கந்தை. நகர சுத்தி செய்வோன் தன் குடும்பத்தைச் சுத்தி செய்வதில்லை. பாதை அமைப்பவன் வாகனம் செலுத்துவதில்லை. இதுபோன்றே உழைப்பு

கள் ஓர் இனத்தின் தலையிலும் ஊதியம் ஓர் இனத்தின் வாழ்விலும் போய் சேருகிறது. பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கமென்ற பலி பீடத்தில் பலியிடப்படுகின்றது.

பொருளாதாரக் கொள்ளை எலும்புருக்கி நோய்போல் நாட்டைப்பிடித்தாட்டுகிறது. பட்டணத்தில் இடம்பம் — கிராமத்தில் வறுமை. நாட்டின் உயிர் நாடியான கிராம வாழ்வு பஞ்சத்தில் மிஞ்சிவிட்டது. இவை ஒரு காரணம் ஏழைத் தொழிலாளியின் வாழ்வில், வறுமை — மடமை — அடிமைத்தனம் - பிணி — கவலை - ஏக்கம் இவை போதாதா பாட்டாளியின் இரத்தத்தை உறிஞ்ச? பணமில்லையேல் கல்வியில்லை செம்மையான வாழ்வு இல்லை, குடி, பொடி, புகை, சூது, கூத்தி, வம்பு, வழக்கு இவற்றுல் எவ்வளவு பணம் சேதமாகிறது. இவற்றை ஒழித்தால் வறுமையிலும் செம்மையாக வாழலாமே? அச்சமும் அடிமைத் துயரும் இவர்களை உயரவிடுவதில்லை. ஏழைத்தியாகிகளை நாம் உழைக்கும் தெய்வங்களாக நாகரிக சிருஷ்டி கர்த்தாக்களாக மதித்து ஏற்ற வேண்டும், போற்றவேண்டும். ஆட்சியமைப்பில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி சமதர்ம நிலை யடையச் செய்யவேண்டும். ஏழைத் தொழிலாளி என்ற நிலைமாறி உலகத் தொழிற் சிருஷ்டி கர்த்தாக்களென்ற நிலை தொழிலாளருக்கு ஏற்பட்டால்தான் உண்மையான நாகரிகம், உயர்ந்த சோஷலிச ஜனநாயகம் நமது நாட்டிலும் தோன்றிச் சுடர்விடும்.

———



# நூலகங்களும் : : : அவற்றின் பயனும்

க. தெய்வேந்திரம்
(படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம், திருவையாறு)

மக்கள் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது போல கல்வியும் இன்றியமையாத ஒன்ருகும். அதனுலேயே புதுமைக்கவி பாரதி ''அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதிலும் பார்க்க ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சாலச் சிறந்தது'' என்றும்; ஔவை மூதாட்டி ''பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்றும்; கூறியுள்ளார்கள். அறிவு உணவிலும் பார்க்கச் சிறந்தது என்பது பாரதியின் கருத்து. ஆகவே அறிவின் தரம் சொல்லுந் தரமன்று. நுண்ணறிவு கொண்ட அறிஞர்கள் ஒவ்வொரு துறையிலும் தம் முற்றிய அறிவால் ஆராய்ந்து பெற்ற நிறைவான கருத்துக்களை மற்றவரும் அறியும் வண்ணம் நூல்களாக வெளியிட்டிருக்கின்ருர்கள். இப்பல்வேறு துறைகளிலும் சென்ற அறிஞர்களின் கருத்துக்குவியல்களை தேக்கி வைத்து மக்களின் பேதமையை நீக்கி பேரறிவைக் கொடுக்கும் நிலையமே நூல்நிலையமாகும்.

''பல்லாயிரம் ஆண்டுகளாக இப்பாரில் வாழ்ந்தவருள் தலைசிறந்த அறிஞர், கவிஞர் தம் கல்வியின் பயனுக விழுமிய கருத்துக்களைச் சிறந்த முறையிலும் சீரிய ஒழுங்கிலும் தொகுத்த தொகுப்புக்களின் தொகுதி உன்னுடன் உறவாடக் காத்திருக்கின்றன''. இவ்வாறு நூல் அகங்களின் பெருமையைப் பற்றி அறிஞர் எமர்சன் எழுதுகிருர். அகிலத்து மக்களெல்லாம் உள்ளத்தால் உயர்ந்து வாழ அருள்வழி காட்டியவர்கள், அன்புநெறி காட்டியவர்கள்; ஆராய்ச்சி வல்லுனர்கள்; அரசியல் நிபுணர்கள்; விஞ்ஞான விற்பன்னர்கள்; தத்துவ ஞானிகள்; இலக்கிய மேதைகள்; கவிச்சக்கரவர்த்திகள் எல்லோரும் தாம் எண்ணியவற்றைக், கண்டவற்றை ஆராய்ந்தறிந்தவற்றை எழுத்தாலேதான் உலகிற்கு அறிவித்திருக்கிருர்கள். ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு அறிஞரின் கருத்தாகவே அமைகின்றது, நாம் ஒவ்வொரு நூலைப் படிக்கும் பொழுதும் ஒவ்வொரு அறிஞருடனும் உறவாடுகின்ருேம் என்று கூறலாம்.

நூலகங்கள் பேரறிஞர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள அவர்களின் கருத்து விருந்தில் நாமும்,







கரைச்சிக் கிராமசபை அக்கிராசனரும் அங்கத்தவர்களும்

கலந்து கொள்ள நமக்கு அரியவாய்ப் பளிக்கிறது. பேரறிஞர் பேக்கன் அவர்களும் '' தர்க்க சாஸ்த்திரம் ஒருவனுக்கு வாதாடும் திறமையை அளிக்கிறது'' என்று கூறியுள்ளார். இதனால் நூல்கள் ஒருவனை எவ்வளவு உயர்ந்தவனாக்குகின்றது என்பதை அறிஞர் வாயிலாக அறிகின்றோம். நூலகங்களில் பல நாடுகளின் நூல்களையும் மக்கள் பார்த்து படிப்பதனால் அந்நாடுகளின் சாதி சமயங்களைப் பற்றியும் கல்வி கலாச்சாரங்களைப்பற்றியும் மற்றைய நாட்டு மக்கள் அறியக்கூடியதாக இருக்கிறது. மற்றும் புராண இதிகாச நூல்களையும் சரித்திர சம்பந்தமான நூல்களையும் வாசிப்பதனால் மக்களின் முன்னேற்றத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் காணக்கூடியதாக இருக்கிறது இவ்விதம் மக்களின் சிந்தையைத் தெளிவாக்கி, சீர்திருத்தப்பாதையில் செல்ல நேரான நல்வழி வகுக்கும் நூலகங்கள் வைத்தியத் துறை; தொழில்துறை; விஞ்ஞானத் துறை; நாடகத்துறை; இலக்கியத் துறை ஆகிய எத்துறைகளிலும் முன்னேற விரும்புபவர்களுக்கும் தம் விருப்பத்திற்கு ஏற்றவாறு அதிக செலவின்றி கற்று ஆய்ந்து அத்துறையில் சிறந்து விளங்க பேருதவி புரிகின்றன.

முன்னேற்ற மடைந்த நாடுகளான அமெரிக்கா, ருஷியா போன்ற நாடுகளில் எல்லாம் நூலகங்களுக்கு மதிப்பளிக்கப்பட்டிருப்பதை கண்கூடாக பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. அதுமட்டுமல்லாது அங்கு கிராமங்கள் தோறும் சென்று மக்களுக்கு நூல்கள் வழங்கும் நடமாடும் நூல்நிலையங்களும் உண்டு இந்நிலையங்கள் மக்களுக்கு தேவையான நூல்களை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு கிராமங்கள் தோறும் சென்று அவர்களுக்குத் தேவையான நூல்களை வழங்கி வருகின்றன. இதனால் வெளியில் சென்று படிக்கமுடியாத வயோதிபர்களும், உடல்நலம் குறைந்தவர்களும் நூல்களைப்பெற்று அறிவை விருத்தி செய்யக் கூடியதாக இருக்கின்றது. இது அங்குள்ள அனைவரும் கற்றறிந்த வல்லுனர்களாக இருப்பதற்கு காரணமாகும்.

நூல்நிலயத்தை ஓர் அறிவுச் சுரங்கம்; முத்துக்கள் நிறைந்த அறிவுக்கடல்; ஒரு கலங்கரை விளக்கம்; அறிவாலயம் எனப் பல பெயர்களால் அழைக்கலாம். பள்ளிப்படிப்பிற் சில குறிப்பிட்ட புஸ்தகங்களே இடம் பெறுகின்றன. அவற்றை மாத்திரம் ஒருமாணவன் கற்று வல்லவனாக மாட்டான். சிலர் பள்ளிப்படிப்போடு கல்வி முடிகிறதென எண்ணுகின்றனர். ''கல்வி கரையில கற்பவர் நாள் சில'' என்பது பெரியார் வாக்காகும்.

> ''தொட்டனைத் தூறும் மணற்
> கேணி மாந்தர்க்கு
> கற்றனைத் தூறும் அறிவு''

என்றார் குறளாசிரியர். ''கண்டதும் கற்க பண்டிதனாவான்'' என்ற பழமொழியும் தொடர்ந்து கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. கல்வி கற்பதற்கு அரிய வாய்ப்பைத் தந்து ஊக்குவித்து அறிவைப் பெருக்குவது அரிய நூல்நிலையங்களாகும். சிந்தை விரிந்து செம்மை பெற்று நல்ல செயலாற்ற மக்களைத்

தூண்டுவது நூல்நிலையங்களாகும். சமாதானமும், சன்மார்க்கமும் சமரசமும் நிலவச் செய்வது நூல்நிலையங்களாகும்,

நூல் நிலையத்தை திறப்பவன் சிறைச்சாலையை மூடுவதற்கு உதவி செய்பவன்'' என்றார் அறிஞர் ஹிகோ. இப்பெருமையைக் கரைச்சிக் கிராமசபை கரைச்சிப் பகுதியிலே ஒரு நூல்நிலையத்தை திறந்து வைத்ததன் மூலம் பெற்றுவிட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது. அத்துடன் இலக்கிய விழாவும் அதற்காக பேச்சுப்போட்டிகளும். இசைப் போட்டிகளும், நாடகப் போட்டிகளும் நடாத்தி தமிழரின் பண்பாட்டையும் தமிழ் மொழியையும் வளர்த்து வருகிறது கரைச்சிக் கிராம சபை. கரைச்சிக் கிராம சபையின் இப்பணி மேலும் சிறந்தோங்க இறைவனைப் பிரார்த்திப்போமாக.

வாழ்க நூல் நிலையம்!

வெல்க கரைச்சிக் கிராமசபையின் பணி!!

---

# கரைச்சிக் கிராமசபை சித்த ஆயுள்வேத வைத்திய சாலைகளும் சுதேச வைத்தியக் கலையும்


க. பொன்னம்பலம் (உள்ளூராட்சி வைத்தியர்)
[ க கி. சபை சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, பரந்தன் ]

இப்பகுதி மக்களின் வைத்திய வசதிக்குறையை நீக்கும் பொருட்டு பரந்தன் வைத்தியசாலை 1964-ம் ஆண்டு ஆடி மாதம் 15-ந் திகதி கரைச்சிக் கிராமசபையால் ஸ்தாபிக்கப்பட்டது. இவ் வைத்தியசாலையில் நூற்றுக் கணக்கான நோயாளர்கள் தினமும் சிகிச்சை பெற்று குணமடைந்து வருவதையிட்டும் இவ்வைத்தியசாலையின் முற்போக்கைக் கண்ணுற்றும் அரசாங்கம் 1965-ம் ஆண்டு தொடக்கம் நன்கொடை வழங்கி வருகின்றது. இவ் வைத்தியசாலையில் பல பகுதிகளிலுமிருந்து நூற்றுக்கணக்கான நோயாளர் சிகிச்சை பெறுவதைக் கண்ணுற்ற கிராமசபை, கரைச்சிப் பகுதி மக்களின் நலன் கருதி 1966-ம் ஆண்டு உருத்திரபுரம், வட்டக்கச்சி ஆகிய பகுதிகளிலும் இரு புதிய வைத்தியசாலைகளைத் திறந்து வைத்தது. ஒரே கிராம சபைப் பகுதியில் மூன்று வைத்தியசாலைகளை அமைத்துள்ள பெருமை கரைச்சிக் கிராமசபையையே சாரும்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உயர்திரு. சி. சி. மாணிக்கவாசகர் B. A. அவர்களினதும், கரைச்



கிராம சபையால் புதிதாக அமைக்கப்பட்ட
பரந்தன் வைத்தியசாலையில் நோயாளர் சிகிச்சை பெறுகின்றனர்.



அக்கிராசனர்
மின்சார அத்தியட்சகரும் மின்சார பகுதி ஊழியர்களும்

சிக் கிராமசபை அக்கிராசனர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களினதும் விடா முயற்சியினுலும் பொது சனங்கள் சுதேச வைத்தியத்தில் கொண்ட பூரண ஆர்வத்தினுலும் அரசாங்கம் இவ்வருடம் நன்கொடைப் பணத்தைக் கூட்டி, 28,000 ரூபா வழங்கியுள்ளது. இவ்வைத்திய சாலைகளால் இப்பகுதி மக்களும் அயல்நாட்டு மக்களும் மிக நன்மை அடைகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க தொன்ருகும்.

நமக்கென்று சித்தர்களாலும் கைதேர்ந்த வைத்தியக் கலைஞர்களாலும், ஈஸ்வரசங்கற்பத்துக்குட்படுத்தப்பட்டு, உதவி அருளப்பட்டது நமது சித்த ஆயுள்வேதம். காலதேச வர்த்தமானங்கட்கேற்ற பண்டைப் பண்புகளோடு அமைந்து இருக்கிறது. நாம் உஷ்ணவலயப் பிரதேசத்தில் வாழ்கிருேம். பெரும் பான்மையாக உஷ்ணவலயப் பிரதேசங்களில் கிடைக்கக்கூடிய நாட்டு மூலிகைகளைக் கொண்டே தயாரிக்கப்படுவன நமது சுதேச வைத்திய ஔடதங்கள்.

இயற்கையின் உண்மைகளை உணர்வதில் எத்தனையோ மடங்கு அதிகமாக மனிதன் இன்று முன்னேறி இருக்கிருன். உஷ்ணவலயப் பிரதேசங்களின் தேகநிலைக்கேற்கவே அதே சீதோஷ்ண ஸ்தித்தாவரங்கள் ஜீவவர்க்கங்கள், தாதுப்பொருட்கள் இயற்கையாலமைந்து கிடக்கின்றன. அவற்றைக் கொண்டியற்றப்பட்ட சுதேச வைத்திய ஔடதங்களே உஷ்ணவலயப் பிரதேசிகளாகிய எங்கள் தேக நிலைக்கு உவப்பானவை என்பதை எந்த இயற்கையாராச்சியாளரும் மறுக்க முன்வரரார். மத்திய வலய சீதளவலயப் பிரதேசவாசிகளின் தேகநிலைக்கு உதவக்கூடிய அந்நியநாட்டு மருந்துகளிலும் பார்க்க, சுதேச வைத்திய ஔடதங்களே, உஷ்ணவலயப் பிரதேசிகளாகிய எங்களுக்கு உவப்பானவை. பட்டினிக் கொடி பறக்கும் இந்தக் காலத்தில் பஞ்சப் பாட்டுப்பாடி, சோற்றுக்குத் தாளம் போட்டு, ஏழைகள் பரதவிக்கும் இந்தக் காலத்தில், பொருளாதாரத் துறையில் பூச்சியமடைந்து வரும் எங்கள் சுதந்திர இலங்கையிலிருந்து அந்நியநாட்டு மருந்துகளுக்காக வருடா வருடம் எத்தனைகோடி ரூபாய் பிறநாடுகளுக்கு வெளியேறிவிடுகிறதென்பதை சுதேசிகளே எங்களில் எத்தனை பேர் உணர்ந்திருக்கிருேம்.

எங்கள் இலங்கையில் வறுமை தலைவிரித்து தாண்டவமாடுவதற்கு இதுவுமொரு பிரதான காரணமென்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். அனேகமாய் நோய்களை வேரோடு களைந்து பூரண சுகமடையச் செய்வது எங்கள் சுதேச வைத்தியமாகும்.

பண்டைப் பெருமை பெற்ற சுதேச வைத்தியமே சுகந் தரும். சுதேச வைத்தியமே சிறந்தது. அரசாங்கத்தின் பேராதரவு சுதேசவைத்தியக்கலைக்கு பெருமதிப்பூட்டி வருகிறது. மேலும் இவ்வைத்தியத்துறையை அபிவிருத்தி செய்தல் அவசியமாகும். சுதேச வைத்தியக்கலை வாழ்க!.

——

# மகத்தான மாறுதல்கள்

எம். எஸ். யோகராாசன் (பொது காரியதரிசி)
(ஸ்டார் நாடகமன்றம் கிளிநொச்சி)

*'' அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே''.*

காடு மண்டிப்போயிருந்த இடம் இன்று கமத்தொழில் களமாக மாறியது... காலம் சென்றது வரலாறே மாறியது பூமி பொன் கொளிக்க ஆரம்பித்தது... கிளிநொச்சியா...? என்றவர்களே கிளிநொச்சிக்கு..., என்று கூறுமளவிற்கு புரட்சிகரமான மாறுதல் நடந்தது, நடந்து கொண்டிருந்தது. வாழத் துடிப்போருக்கு வழிகாட்டியாக மாறியது. வட்டிக்கடைகளும், பெட்டிக்கடைகளும் வந்து நிறைந்தன.. மண்ணாக இருந்த இடம் பொன்னாக போற்றும்படியாக வளர ஆரம்பித்து வாழவந்தோரையெல்லாம் வாழவைக்கும் தாயாக மாறியது கிளிநொச்சி...

1958-ஆம் ஆண்டின் மொழிக்கலவரம் கிளிநொச்சியின் வளர்ச்சிக்கு ஓர் ஊன்றுகோலாக ஒரு மைல் கல்லாக அமைந்தது. 1958-ன் பின் கிளிநொச்சியைப் பற்றித் தமிழ்ப்பேசும் இனம் உணரத் தலைப்பட்டது. கிளிநொச்சியின் மதிப்பும் ஒருபடிஎன்ன பல படிகள் எதிர்பாராதவாறு திடீரென வளர ஆரம்பித்தது. அன்றும் வாழ்ந்தனர் இன்றும் வாழ்கின்றனர் நாளையும் வாழப்போகின்றனர். நேற்று வந்தனர்... இன்று வருகின்றனர்... நாளையும் வருவார்கள்... ஆட்சி மன்றம் அதாவது ஊராட்சி மன்றம் மாற்றத்திற்கு ஈடு கொடுத்து வளர்ந்து வருகின்றது. மேலும் வளரும் என எதிர்பார்க்கலாம். கிளிநொச்சி பொன் கொளிக்கும் பூமியாக, பூரிக்க வைக்கும் தாயாக, யாழ். மாவட்டத்திலேயே ஓர் தங்கச் சுரங்கமாக மாறியது அல்ல, மாற்றப்பட்டது... ஊர் ஆட்சி மன்றம் அன்றெல்லாம் பழமை வாதிகளின் பாசறையாக விளங்கியது... அங்கே என்ன நடக்கின்றதென்பதே தெரியாதபடி இரும்புத்திரையாக, பிணைப்பற்ற ஆட்சியாக மனதைக் கவரா மன்றமாக ஆட்சி செலுத்தியது... மாற்றம் ஏதும் உண்டா... என்றால்... ஏன் தடுமாற்றம் போதிய அளவிற்கிருந்ததே என்று கூறுமளவிற்குப் பாசறை பலம் பொருந்தியிருந்தது- பழமையின் பிடியிலிருந்து சென்ற 1964-ல் விடுதலைபெற்ற ஊராட்சி மன்றம்... தனக்கென்றோர் தனிப்பாதையில் துடி நடை பயின்றது .. 1964-ன் பின் எதைச்சாதித்தனர் என்பதைக் கட்டுரையில் விடை பகர்வதைவிட இதோ கரடிப்போக்குச் சந்தி... சற்றே திரும்புங்கள் அதோ... தியேட்டர், அதோ சிறிது அப்பால் தெரிகின்றதே அதுவும் தியேட்டர் என்பதைவிட திரும்பி விரும்பிய பக்கமெல்லாம் செல்லுங்கள்... சொல்லுங்கள் கிளிநொச்சி வளர்ந்துவிட்டதா இல்லையா... என்பதைக் கேட்டால் கிடைக்கும் பதில்... எதுவோ... அதுவே 64-ம் ஆண்டின் பின்னால் ஏற்பட்ட வளர்ச்சி...



திருவையாறு படித்த வாலிபர் திட்டத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பிரயாணிகள் தங்கும் இடத்தை திட்டக் குடியேற்றவாசி திரு M. யோகநாதன் திறந்து வைக்கிறார்.



புதிய பஸ் நிலையத்தை முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. சிவசுந்தரம் அவர்கள் திறந்து வைக்கும் நிகழ்ச்சி

1965-ம் ஆண்டு மார்கழி மாதத்தில் ஒருநாள் விடிந்தது. என்றும்போல் அன்றும் விடிந்தது. ஒவ்வொருவரின் முகத்திலும் கேள்விக்குறி. சாகித்திய விழா .. வாம் .. நடக்குமா... அல்லது கான மயிலாடக் கண்ட வான்கோழியின் கதை போலாகுமா என்ற கேள்விக்குறி... முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள் முன்பெல்லாம் ஆட்சிமன்றம் இதை யேன் நடாத்தவில்லையென கேட்கும் அளவிற்கு முதன்நாள் நிகழ்ச்சி நடாத்தி முடிக்கப்பட்டது.

2-ம் நாள் மக்கள் மனதில் மகிழ்ச்சி வித்தூன்ற கொட்டகையே நிரம்பி வழிய ஆரம்பித்தது. சுருங்கக் கூறில் எள் போட்டால் எண்ணையாகும் கூட்டம் .. அத்தனை முகத்திலும் மகிழ்ச்சிப் பெருக்கு. உணர்ச்சிக் கொந்தளிப்பு, பேருவகை .. கிளிநொச்சியே விழாக்கோலம் பூண்டு மகிழ்ந்ததென்று கூறினால் மிகையாகாது முதல் அறிமுகமே... அரிச்சுவடியாக அமையாது அநுபவ கலையாக மாறியது. ஊராட்சி மன்றத் தலைவரின் கடமை உணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது.

தலைவர் சங்கரியின் ஆட்சியில் கட்சி பேதமற்ற விழாவாக மாலை நிகழ்ச்சி ஜே .. ஜே . எண்ணும் அளவிற்கு நிறை விழாவாக ஆரம்பித்தது .. கருத்தரங்கில் பல கட்சியினரும் கலந்து சிறப்பித்தனர். இது தலைவரின் கண்ணியத்தைப் பறை சாற்றும்படி அமைந்ததையிட்டு மக்கள் மன்றம் களிப்படைந்தது. கண்ணியமிக்க தலைவன் செயல் கண்டு ..

முன்னிருந்த ஆட்சிமன்றம் சாதிக்காத ஒன்றை சாதித்ததன்மூலம் ஆட்சி மன்றம் தனக்கென்ற ஓர் தனிப்பாதையில் நடைபயிலத் தொடங்கியது. இதன் மூலம் மக்களுக்கும் ஆட்சிமன்றத்திற்குமிடையே ஓர் சகச மனப்பான்மை. ஓர் அன்னியோன்னிய உறவு ஏற்பட்டு... ஆட்சி மன்றத்தில் நாமும் ஓர் அங்கமே என்பதை உணர வைத்ததன் மூலம் அதன் தலைவர், கேட்போர்க்கெல்லாம் இனியவராக, பார்ப்போர்க் கெல்லாம் எளியவராக விளங்கினர். முன் ஆட்சி மன்றம் இருந்தது. அதை ஆக்கிவைத்த மக்கள் இருந்தனர். ஆனல் இடையே தொடர்பு என்ற நட்புச் சங்கிலி துண்டு பட்டுப் போயிருந்தது. 65-ம் ஆண்டின் விழா மகத்தான மாற்றத்தை மக்களிடையே ஏற்படுத்தியது. இவ் இலக்கிய விழாவின் மூலம் மக்களின் மனதில் ஓர் மங்காத மாசற்ற இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர் ஆட்சியாளர்.

முதல் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாம் அடி வைக்கப்பட்டது அது. "பொதுசன நூல்நிலயம்" வேண்டுமா ஒன்று என்று கேட்டவர்களும் வாயடைத்துப் போகும்படி நூல்நிலையம் திறக்கப் பட்டு இயங்க ஆரம்பித்தது .. அது பற்றிய ஓர் சர்ச்சை தனிப்பட்ட ஒருவரின் மருத்துவ மனையில் நடைபெற்றது... பெரியவர் ஒருவர் முன்பு நூல்நிலையம் திறக்கப்படாமைக்கு சுட்டிக் காட்டிய காரணம் விசித்திரமானது மட்டுமல்ல விபரீதமானதும்கூட. அவர் கூறியதுமுன்பெல்லாம் படிக்கும் நிலையில் ஆட்கள் இல்லை... மிருகங்கள்தான் இருந்தன என்றார்... மற்றவர் வாயடைத்துப் போய்விட்டார்... அந்தப் பெரியவரை நான் கேட்கின்றேன் கிளிநொச்சியில் படிப்பவர்கள் இல்லாமையாலா பத்திரிகை வியாபாரம் ஆரம்பித்து நடத்தினர் . படிப்போர் இன்றியா பாடசாலைகள் திறந்துகிடந்தன. பத்திரிகைக் கடை பூட்டியிருக்கவில்லை, பாடசாலை அடைத்துவைக்கவில்லை- பாடசாலையில் கல்விபயின்ற மாணவர்கள் மிருகங்களா...? பத்திரிகை வாசித்தவர்களெல்லாம் மிருகங்களா...? இல்லையே... ஏன்இதை முன்னைய ஆட்சியினர் செய்ய

வில்லை... செய்யும் திறனின்மையா, அல்லது சுய இச்சை காரணமா...? ஏன், மக்களின் அறிவிற்கு விருந்துவைக்கவில்லை. அறிவு வளர. ஏதேனும் முயற்சி செய்யப்பட்டதா... ஏன் மக்களைப்பற்றிக் கவலைப்படாது ஆட்சியுண்டு தாம்உண்டு என வாழ்ந்தனர். ஆட்சி மன்றம் மக்களின் கவனத்தை ஈர்க்கும்படி ஏன் நடந்து கொள்ளவில்லை...?

1967-ம் ஆண்டின் ஆட்சிமன்றத்தின் செயல்கள் முன்னேற்றம் என்பதை விட சாதனை என்றே கூறவேண்டும் மருத்துவ வசதியற்ற இடங்களில் எல்லாம் மருத்துவமனை அமைக்கப்பட்டது. இலவசசேவை அளித்து மக்களின் அன்றுட சுகாதார வாழ்வில் ஒளியூட்டப்பட்டது. பின் மத்திய பஸ்வண்டி நிலையம் ஒன்றை அமைத்து, பார்த்தோர் பரவசமடையும்படி வெகு அடக்கமான முறையில் திறந்து வைத்தது... சந்தை முகப்பை வளைவுகட்டி அழகுபடுத்தியது... இவையெல்லாம் முன்னிருந்தோர் செய்யவில்லையே - பணமின்மையா... அப்படியென்றல் தற்போதைய வரிகள் முன்பு அறவிடப்படவில்லை... மக்களுக்காக மக்களின் தேவைக்காக தன் துன்பத்தையும் மறந்து மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட அரும் பெரும் தலைவர் நீ இன்றல்ல என்றும்... வாழ்வாய் வல்லவனுக... வருங்கால சந்ததியே போற்றும்படி... பொன்னுள்ளம் கொண்ட போற்றும்படி வாழும் சங்கரியின் சாதனையைக் கண்டு வேதனை அடைவோர்க்கு ஒரு வார்த்தை முன்னேறி .. முன்னேற விடுங்கள் நாம் வாழ, நம் ஆட்சி வாழ ஒத்துழைத்து கிளிநொச்சியிலேயே ஒரு புதிய அத்தியாயத்தைப் புரட்டுங்கள்.

இம் மாறுதல்கள்... மகத்தான ஒன்ரு இல்லையா என்பதையிட்டு முடிவு கட்ட வேண்டியது இதைப் படித்துக கொண்டிருக்கும் பேரன்பிற்குரிய ஒவ்வொருவரினதும் கடனுகும். மேற்படி மாறுதல்கள் மனதிற்கே ஒரு ஆறுதலாகவும் உள்ளத்திற்கொரு தேறுதலாகவும் தோன்றவில்லையா..? தோன்ருத பட்சத்தில் இக்கட்டுரையே ஏதுகை மோனையற்ற ஓர் கவிதையாக கணவனை இழந்த கன்னிகையாக யாருக்கும் விளங்காத புதிராக விளக்க முயன்றதை விளக்க முடியாத விதண்டாவாதியாகும் பேறு என்னுடையதுமட்டுமல்ல .. எனது தோல்வியும் கூட... சங்கரி என்னத்தைச் செய்து விட்டான் என எண்ணத் தோன்றுமானுல்... அதைச்சிறிது மாற்றி யோகராசன் எதை எழுதிவிட்டான் என்று கேட்பதால்... ஒரு நல்ல மனதைப் புண்படுத்தாது விடுகின்றீர்கள்... "நல்லவன் வாழ்வான்", பொதுநீதி நாடு அறியும், நல்லோர் அறிவர் நாமும் அறிவோம், நாடும் நல்லோரும், நாமும் அறியும் பட்சத்தில் இக்கட்டுரையைப் படிப்போருக்கு இடித்துக் கூறவேண்டியதில்லையென அடியேன் எண்ணுகின்றேன். மகத்தான மாறுதல்களை நிலையான சாதனையாக்க மக்கள் முன்வரவேண்டும். அச் சாதனையைச் செய்ய ஒவ்வொரு பொதுமகனும் முன்னிற்பான். அவனை எமது அன்னைபூமி என்றும் ஆசீர்வதிப்பாள்.

•

1967-ம் ஆண்டு மீண்டும் முன்னேறப்பாதையில் அடியெடுத்து வைத்தது. ஆம் ஊரிற்கு ஒளியூட்டுவதன் மூலம் சேவையை விஸ்தரித்தது ஆட்சி மன்றம், மேற்படி மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்த திரு. மாணிக்கவாசகர் அவர்கள்:

> ஊராட்சி மன்றங்களின் தன் சொந்தச் செலவில் மின் விநியோகத்தை ஆரம்பிக்கும் முதலாவது ஊராட்சி மன்றம் கிளிநொச்சியே" என்று

கூறியதன் மூலம் கிளிநொச்சி மக்களுக்கு ஓர் பெருமையை ஏற்படுத்தினுர். இதற்கெல்லாம் காரணம் யார். யாரால் கிளிநொச்சி தலைநிமிர்ந்து நடக்கின்றது என்பதை படிக்கும் நீங்களே முடிவு செய்ய வேண்டும்.

கிளிநொச்சி ஊராட்சி மன்றம் நல்லவர் கையில் இருப்பதால் உதயசூரியன் போல் ஒளி பரப்பி மக்கள் இருள் களைந்து நல்லாட்சி மலரும் என எதிர்பார்ப்போமாக,

மக்கள் குரல் மகேசுவரன் குரல் ஆதலால் பட்டின ஆட்சி ஆனபின் இன்றைய இலக்கியவிழா கமத்தொழில் பெருமையைக் கூறும் பொங்கல் கலைவிழாவாக மீண்டும் நடாத்த முயற்சி செய்யும்படி இன்றுள்ளவர்களைக் கேட்டு கண்டகனவு நனவாக ஒளியூட்டும் எதிர்காலத்தின் உதய சூரியனுக சமன் செய்து சீர்தூக்கும் கோலாக ஊராட்சி மன்றம் மலரட்டும், வளரட்டும் என வாழ்த்தி, முடித்துக்கொள்கின்றேன்.

---

# இதோ! இலங்கையில் கி(இ)ராமராச்சியம்

சி. க. வேலாயுதபிள்ளை

மகாத்மா காந்தியடிகள் இந்த 20-ம் நூற்றுண்டின் அவதார புருஷர் - மகாஞானி - பேராசிரியர்- சிறந்த பாட்டாளி - பரம தியாகி சத்திய சீலர் - தமது வாழ்வில் சாதனை செய்து சோதனை செய்து- போதனை செய்த செயல் வீரர்,

'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்திலெல்லாம் உளன்'

என்ற வள்ளுவன் இலக்கணத்திற்கு இலக்கியமான காந்தி மகான் சர்வோதயம் என்ற நெறிமுறைகளை உலகின் விமோசினத்திற்காக வகுத்தளித்துப் போதித்துள்ளார்கள்.

மகாத்மா காந்தியடிகளுடைய போதனைகள் உலக சமாதானத்திற்குச் சிறந்த ஔஷதமாகும். அவரது போதனைகள் மக்களைப் பட்டினியில் இருந்தும், பிணியில் இருந்தும், அறியாமையில் இருந்தும் விடுதலை செய்யவல்லது. சர்வோதய நெறி முறைகளின் இலட்சியம் கிராமங்கள் விமோசனம் பெற்று புனர்வாழ்வு பெற வழி செய்வதேயாகும், ஒவ்வொரு கிராமமும் சுய தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகுக்கப்படவேண்டும். மக்களிடையே ''ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாய அமைப்பு'' ஏற்படவேண்டும். கிராமம் தன்னைத் தானே நிர்வகிக்கும் ஆற்றல் அடைய வேண்டும். வெளி உதவியின்றி உணவு, உடை, வைத்தியம், கல்வி முதலிய சகல துறைகளிலும்

தன்னிறைவு பெறவேண்டும். இது தான் கிராம ராஜ்யம் அல்லது ''இராம ராஜ்யம்'' என்ற தெய்வீக ஆட்சியாகும். இது மகாத்மா காந்தியடிகளின் அசைக்க முடியாத இலட்சியமாகும்.

மகாத்மா காந்தியடிகளுடைய கிராம ராஜ்யம் அல்லது இராம ராஜ்யம் என்ற இலட்சியமுடைய சர்வோதைய நெறிமுறைகளை இலங்கையிலும் பரப்பும் நோக்கமாக ''அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம்'' 1949-ம் ஆண்டு சித்திரை மாதம் 2-ம் திகதி பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது. பின்பு திரு. ச. பேரின்பநாயகம் அவர்கள் தலைமையிலும் திரு. கு. நேசையா அவர்கள் தலைமையிலும் இச் சங்கம் வளர்ந்து வந்தது. இப்போது இச் சங்கத்தின் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்களாகும். இச்சங்கத்தின் கிளைகள் இலங்கையின் பிரதான இடங்களில் இயங்குகிறது. முக்கியமாக கொழும்பு, திரிகோணமலை, தருமபுரம் ஆகிய இடங்களில் உள்ள கிளைகள் சிறந்த பணியாற்றி வருகின்றன.

மகாத்மா காந்தியடிகளின் சர்வோதய போதனைகளை இலங்கையில் பரப்பும் நோக்கமாக அமைக்கப்பட்ட அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் தனியே பிரசார முறைகளில் இயங்குவதை விடுத்து சாதனை முறைகளில் இயங்குவதையே சிறந்ததென உணரப்பட்டது. இதனால் இச்சங்கம் கரைச்சிக் கிராமசபைப் பகுதியிலுள்ள பகுதியில் உள்ள உருத்திரபுரம் 8-ம் வாய்க்காலில் ''காந்தி நிலையம்'' என்ற பெயரில் மாணவர் குருகுலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தாய், தந்தை அற்ற அநாதரவான பிள்ளைகளும் மிகவறிய நிலையில் கைவிடப்பட்ட பிள்ளைகளும் வளர்க்கப்படுகிறார்கள்.

''காந்தி நிலையம்'' குருகுலத்தில் மாணவர்கள் கல்வியுடன், கமத்தொழிலும், நெசவு, தும்பு வேலை, மரவேலை, தையல் முதலிய பலவகைத் தொழில்களிலும் பயிற்சி பெறுகிறார்கள். மாணவர்களின் உணவு, உடை, கர்நாடக இசை முதலிய சகல தேவைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. விடுதிக் கடமைகள் முழுவதும் மாணவர்களே முறைபோட்டுச் செய்கிறார்கள். ''காந்தி நிலையம்'' மூன்றில் ஒருபங்கு சுயதேவையைப் பூர்த்தி செய்கின்றது. அடுத்த இரண்டு வருடத்தில் 50 சத விகிதம் சுயதேவை பூர்த்தியடையும். கரைச்சி கிராமசபை ஒரு இலவச வைத்திய சாலையைக் காந்தி நிலையத்தில் நடத்துவதால் மாணவர்களுடைய வைத்திய தேவைகள் வசதியாக அமைந்துள்ளது. பொதுவாகக் காந்திநிலையக் குருகுல நிர்வாகம் முழுவதையும் மாணவர்களே நடாத்துகிறார்கள். இதனால் இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் கிராம ராஜ்யத்தின் பல படிகளைத் தாண்டிக் கொண்டிருக்கிறார்கள். காந்தி நிலையம் இலங்கையில் ஒரு பாலைவனப் பசும் சோலையாகும் என்றே கூறலாம்.

காந்தி நிலையம் என்ற குருகுலம் இலங்கையின் எப்பாகத்தி

லும் உள்ள ஏழை – அநாதரவான குழந்தைகளை– மாணவர்களைச் சாதி மத – இன - வர்க்க பேதமின்றி அணைத்து - ஆதரவளித்து கை தூக்கி விடத் தயாராகவுள்ளது. இந்நிலையத்தின் வளர்ச்சிக்காக இலங்கையில் பல பகுதிகளிலும் உள்ள பெருமக்கள் பலர் வருடந் தோறும் நிதி பொருள் உதவிகளைச் செய்து ஆதரவளித்து வருகின்றார்கள். சப்பத்து தானம், நெல்லுதானம், உபகரண தானம், சிரமதானம் ஆகிய பல துறைகளிலும் பெருமக்கள் உதவி செய்து வருகிறார்கள்.



காந்தி நிலைய மாணவர்கள்
கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும்
காட்சி

காந்தி நிலையம்– குருகுலத்தின் வளர்ச்சிக்காக இன்னும் பல வசதிகள் வேண்டும். விவசாயத்துறையில் புரட்சிகரமான முறையில் முன்னேறுவதற்கு இயந்திர சாதனங்கள் தேவையாக உள்ளன. இன்னும் சில கட்டடங்கள் கட்ட வேண்டி உள்ளன. தர்ம சீலர்களின் அன்பும், ஆதரவும் நிறைய வேண்டும். இந் நிலையம் இலங்கையிலேயே ஒரு முற்போக்கான, புரட்சிகரமான, முன்மாதிரியான அமைப்பு முறையாக இருக்கின்றது. வாழ்வைத் தியாகம் செய்யக் கூடிய இளைஞர்கள் வந்து சேர்வார்களாக.

மகாத்மா காந்தியடிகளின் போதனைகளை மாணவர்கள் மூலம் சமூக வாழ்க்கையில் கொண்டு வருவதற்காக காந்தி நிலையம் இருப்பதுபோல இளம் வாலிபர்கள் மூலம் சமூக வாழ்க்கைக்குக் கொண்டுவர ஒரு திட்டத்தை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் அமைக்கவிருக்கிறது. அக்கராயன் குளத்தில் கோணாவில் சந்தியில் சங்கத்திற்கு அரசாங்கம் ஏற்கனவே 25 ஏக்கர் நிலம் உதவி உள்ளது. இந் நிலம் துப்பரவு செய்து கமத்தொழிலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து மேலும் 50 (ஐம்பது) ஏக்கர்க்காணி அரசாங்கம் உதவுகிறது. இன்னும் 25 ஏக்கர் நிலம் கோரப்பட்டுள்ளது. மொத்தமாக 100 ஏக்கர் நிலத்தையும் உபயோகித்து இங்கு ''காந்திக்கிராமம்'' அமைக்கும் திட்டத்தை இச்சங்கம் மேற்கொள்ள விருக்கின்றது.

''காந்திக் கிராமம்'' ஒரு கிராமிய சர்வகலாசாலையாக அமையும். காந்தியடிகள் நூற்றாண்டு ஞாபகவேலையாக இத்திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இங்கு வாலிபர்களுக்குக் கமத்தொழிலுடன் கைத்தொழில்த் துறைகள், இயந்திர

சாதனத் துறைகள், சுதேச - இயற்கைவைத்தியத் துறைகள், விஞ்ஞானத்தை விவசாயத்திற்குக் கொண்டுவரும் புதுமுறைகள், இலக்கியம்-சமயம், கலைகள் முதலிய துறைகள் ஆராய்ச்சி முறையுடன் பயிற்றப்படும்.

மகாத்மா காந்தியடிகளின் போதனைகளைத் தாய்க்குலத்தின் மூலம் சமூக வாழ்வில் கொண்டு வருவதற்காக தருமபுரத்தில் ''அன்னை கஸ்தூரிபாய் இல்லம்'' அமைக்கப்படவுள்ளது. இதற்காக 3 ஏக்கர் நிலம் சங்கத்திற்காக உதவப்பட்டுள்ளது. மேலும் 25 ஏக்கர் நிலத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டுப் பண்பாடு பழக்கவழக்கங்களும் நாகரீக-கலாச்சாரத் துறைகளும் ''கலப்படம்'' செய்யப்பட்டு மறைந்து வருகின்றன. சமூக அமைப்பில் ஆண்களிலும் பார்க்க தாய்க்குலத்தினருக்கே பேராதரவு அளித்து உதவவேண்டிய சூழ்நிலை உள்ளது. தாய்க்குலத்தினர் மிகவும் அல்லல் உற்று- வதங்கி - கலங்கி வாழ்வதை எங்கும் காணலாம் பல காரணங்களினாலும் தாய்க்குலம் சீரழிகின்றது. தன்னம்பிக்கையுடன் சுயமுயற்சியுடன் வாழ வசதிகள் இல்லை. பலர் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுகின்றனர். மனத்துயர் - தொல்லை -கஸ்டம் வறுமை அறியாமை - ஆதரவின்மை, பிணி ஆகியவற்றால் தாக்கப்படுகின்றனர். தாய்க்குலத்தின் கண்ணீர் துடைக்க அவர்கள் வந்து ஒதுங்கி மன ஆறுதல் அடைய ''அன்னை கஸ்தூரிபாய் இல்லம்'' ஆரம்பித்தேயாக வேண்டும்.

''அன்னை கஸ்த்தூரிபாய் இல்லம்'' ஏழை அனாதரவான சிறுமிகள் தஞ்சமடையவும், கல்வியுடன் நெசவு, தும்பு, தையல் முதலிய கைத்தொழிற் பயிற்சியும் பெற்று சுயமுயற்சியால் வாழவும், குடும்பக்கலை - வீட்டுப்பணிகள் முதலிய மனையியல் துறைகளைப் பயிற்சி பெறவும், பல காரணங்களால் கஸ்டப்பட்டுத் தவித்து புகலிடம் அற்ற தாய்க்குலத்தினர் வாழ வழி காட்டவும் வயோதிப நிலையில் ஆதரிப்பார் அற்று சீரழிவோர் ஆறுதல் அடையவும், வழிகாட்டலாம். தியாக உள்ளம் படைத்த சேவகிகளை உற்பத்தி செய்யவும், பெண்கள் வைத்தியம், தாய் - சேய் நல இல்லம் முதலிய தாதிப் பயிற்சி பெறவும் கலை - கலாச்சாரத்துறைகளை நமது பண்பாடு பாரம்பரியங்களுக்கு அமைய விருத்திசெய்யவும் காலக்கிரமத்தில் ''அன்னை கஸ்தூரிபாய் இல்லம்'' பெண்களுக்கான ஒரு கிராமிய சர்வகலாசாலையாக அமையும். இத் திட்டத்தையும் காந்தி நூற்றாண்டு ஞாபக வேலையாக அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் மேற்கொள்ளவிருக்கின்றது.

மகாத்மாகாந்தியடிகளின் சர்வோதயநெறிகளைப் பரப்பும் நோக்கமாக அகில இலங்கைக் காந்தி சேவா சங்கக் கொழும்புக்கிளை அதிதீவிரமாக வேலைசெய்து வருகின்றது. அங்கு எல்லா மதத்தினர், இனத்தினர் மத்தியில் வேலைசெய்வது ஒரு மகத்தான பணி, சிரமமானதுமாகும். திரு. சோ. க. தம்பிப்பிள்ளையினது அயராத முயற்சியே

இதற்குக் காரணமாகும். சிங்கள பாஷையில் மிகவும் பாண்டித்தியம் உடைய இவர் கொழும்பில் ''சர்வோதயபாத்திர இயக்கம்'' தொடங்கியுள்ளார். கொழும்பு இந்து கல்விச் சபையினர் சங்கத்திற்கு உதவிய 2 ஏக்கர் நிலம் இரத்மலானையில் உள்ளது. இங்கு ''சர்வோதைய நிகேதன்'' அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இங்குதான் காந்திய மியூசியம் அமைக்கப்பட உள்ளது. புதுடில்லியில் உள்ள காந்தி ஞாபகார்த்த சபையின் உதவியுடன் இந்தப் பணி ஆரம்பமாகின்றது. இரத்மலானை விமான நிலையத்திற்கு அருகாமையில் ''சர்வோதய நிகேதன்'' அமைந்திருப்பது மிகவும் நல்லது. வெளிநாடு செல்வோர் வருவோர் அனைவரும் இதைப்பார்க்க வேண்டி ஏற்படும்.

''சர்வோதய நிகேதன்'' தத்துவ ஆராய்ச்சி, பிரசாரம் இயந்திர உதவியுடன் கதர் வேலைக்கான உபகரணம் தயாரித்தல், காந்தி நிலையக் குருகுல மாணவர்களின் உயர் கல்விக்கு உதவுதல், சமூக உறவுக்கான கருமங்களைச் செய்தல், மத, இன, மொழி வேறுபாடற்ற தொண்டுகளைச் செய்தல் உயர் தலைவர்களது கவனத்தைச் சர்வோதய நெறி முறைகளுக்குத் திருப்புதல் முதலிய பணிகளைச் செய்ய உதவும்.

''சர்வோதய நிகேதன்'' கொழும்பில் ஒரு முன்மாதிரியான ஆச்சிரமமாக அமையும். உலக சமாதானத்திற்கும் சமூக பொருளாதார விருத்திக்கும் பட்டினி, பிணி அறியாமை இவற்றுடன் போராடுவதற்கும் ஒரு மத்திய தளமாகவும் பணியாற்றும்.

மகாத்மா காந்தியடிகளின் செய்திகளை இலங்கையின் மூலைமுடுக்குகள் எல்லாம் பரப்பும் பணிகளை அகில இலங்கை காந்தி சேவா சங்கம் சூழ்நிலை வசதிக்கேற்ற முறையில் செய்யத் தயாராக உள்ளது, தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்யக்கூடிய வாலிபர்களை இப்புரட்சியில் வந்து சேருமாறு அழைக்கின்றோம். 1968-ம் ஆண்டு ஒக்டோபர் 2-ம் திகதி தொடக்கம் 1969-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2-ம் திகதி வரையும் காந்தி வருடம் கொண்டாட ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது. உலகம்முழுவதும் காந்தி நூற்றாண்டு விழாக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இலங்கையில் இக்கொண்டாட்டத்திற்கு செனேற் சபைத் தலைவர் திரு. ஏ இரத்நாயக்கா அவர்கள் தலைமையில் ஒரு தேசிய சபை அமைக்கப் படுகின்றது. முற்போக்கு – சமூகசேவை – சீர்திருத்தம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடைய எல்லா அன்பர்களையும் இந்த இயக்கத்தில் சேர்ந்து புரட்சி செய்ய முன்வருமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

இலங்கையில் கி (இ) ராம ராச்சியம் ஏற்பட வேண்டும். வறுமை பிணி, அறியாமை ஆகியவற்றில் இருந்து மக்கள் விடுபட வேண்டும். இவற்றிற்கு எதிரான புரட்சிக்கு இளைஞர்கள் தங்களை அர்ப்பணிப்பார்களாக.

———

# தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈழத் திருநாடு

கே சின்னத்துரை

தமிழ்த் தாயைக் கலைப் படைப்புகளால் அழகுறச்செய்த சங்ககாலப் புலவர் வரிசையில் பங்குகொண்டு இலங்கையின் இலக்கிய வளர்ச்சியை ஆரம்பித்து வைக்கிறுர் ஈழத்துப் பூதந்தேவநாயனுர்.

அன்றிலிருந்து தொடர்ந்து இலக்கிய வளர்ச்சியில் இணையிலா ஊக்கம் காட்டி உய்ய வைக்கின்றனர் பண்டைய மன்னர்கள். அரசர்களே புலவரொடு புலவராக விருந்து புகழ்க் காவியங்கள் பல படைக்கின்றனர். போற்றத்தகும் இலக்கியங்கள் பலவற்றைப் பேணிக் காத்து வைக்கின்றனர்.

வைத்திய நூல்கள், இசை நூல்கள், இலக்கண நூல்கள், அரசியல் நூல்கள், வீரநூல்கள், தந்திரநூல்கள், காதல் நூல்கள் எனப் பல வித நூல்களை ஆக்குகின்றனர். ஆக்குவோருக்கு ஊக்கமும் வெகுமதியும் அளித்து கலையைச் செழித்து வளரச் செய்கின்றனர்.

அந்நியர் ஆட்சி ஆரம்பமாகின்றது. தமிழ் இலக்கியங்கள் இகழப்படுகின்றன; எரிக்கப்படுகின்றன; எங்கெங்கோ விசிறப்படுகின்றன. இலக்கிய ஈடுபாடு உடையோர் விம்முகின்றனர். வேகுகின்றன- உள்ளங்கள். உயிரினுமினிய தீந்தமிழ்க் காவியங்கள் அழிந்தொழியுமோ என ஐயுறுகின்றனர். தமக்குத் தெரிந்தவகையில் எங்கெங்கோ ஒழித்து, மறைத்து, புதைத்து வைக்கின்றனர் – பாதுகாக்கும் எண்ணத்துடன். இதனல் அழிந்தொழிந்த இலக்கியங்கள் எத்தனை! செல்லரித்துச் சிறிது மிஞ்சிய சீர் பெறும் இலக்கியங்கள் எத்தனை! மறைத்த இடத்திலேயே எடுப்பாரின்றி விடப்பட்ட இலக்கியப் படைப்புகள் எத்தனை! தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பங்குபெறுத தேன் தமிழ்க் காவியங்கள் தான் எத்தனை! எத்தனை!!.

பிறநாட்டார் வருகையால் – பிறமொழிப் புகுத்தலால் புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. ஆமையராய் ஊமையராய் அடங்கி ஒடுங்கிக் கிடந்த மக்கள் ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்'' என வீறு கொண்டு எழுதுகின்றனர். சுதந்திர தாகம் மிகுந்த செய்யுள் இலக்கியங்கள் தோன்றுகின்றன. உரைநடை இலக்கியங்கள் உருவாகின்றன. தமிழ் இலக்கியத்தின் தாய்நாடே போற்

றத்தக்க இலக்கியங்கள்பல இடை யிடை எழுகின்றன.

சுதந்திரம் பெறுகிறது ஈழத்திரு மணிநாடு. சுதந்திர கீதங்கள் முழங் குகின்றன. ஆதவனின் கிரணங்கள் போல் அங்கிங்கெனுதபடி எங்கும் பிர காசமாய் விளங்கத்தக்க இலக்கியப் படைப்புகள் சிருட்டிக்கப்படுகின் றன.

தமிழ் வளர்ச்சிக் கழகங்கள், கலை வளர்ச்சி மன்றங்கள், தேன் தமிழ்—தீந்தமிழ் மன்றங்கள், எழுத் தாளர் சங்கங்கள், பத்திரிகைகள், பத்திரிகையாளர் மகாநாடுகள் எனப் பலவும் பலவிதத்திலும் – கூடியும், பிரிந்தும், தனித்தும் – என்றிவ்வாறு தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஊக் கம் காட்டுகின்றன.

எண்ணற்ற நூல்நிலையங்கள் பர ந்த முறையில் இலக்கியப்பணி புரி கின்றன. இலக்கிய உலகின் பேரறி ஞர்கள் தோன்றுகின்றனர். பேரிலக் கியங்களைப் படைக்கின்றனர். பண்டி தரன்றிப் பாமரரும் நடைமுறை இலக்கியங்களைப் படைத்துப் பெரும் புகழ் பெறுகின்றனர். சிறுகதை, இலக்கியம் சீரிய முறையில் இயங்கு கிறது. நாவல் இலக்கியம் நவீன நடை பயில்கின்றது. காதல் இலக் கியங்கள் கவர்ச்சிமிகக் கொள்கின் றன

தமிழறிந்த நல்லார் உள்ளங்க ளில் இருந்து புறப்பட்ட எண்ணக் குவியல்கள் நன்முத்துக்களாகவும் வைரங்களாகவும், வைடூரியங்களாக வும் ஒளிவீசி ஆயிரமாயிரம் இதயங் களைக் குளிர்விக்கின்றன.

அளப்பரிய பெறுமதிகொண்ட தமிழெனும் நகையணிந்ததமிழன்னை இதோ நகைமுகம் காட்டுகிருள் நாமும் மகிழ்வோம்.



# நாடகம் வாழ, வளர....

க. செ. வீரசிங்கம்
செயலாளர் கிளிநொச்சி இ. க. மன்றம்

கிளிநொச்சியின் நாடக மேடைகளில் நல்ல நாடகங்களை நாம் இன்று மேடையேற்றுகிறோம் என்றால், அந்தப் புகழ்ச்சிக்கு, மதிப்புக்கு காரண கர்த்தாக்கள் நாங்கள் அல்ல. அக் கௌரவத்திற்கும், புகழுக்கும் உண்மையான பொறுப்பாளி என் மதிப்புக்குரிய குருநாதர் திரு. சொர்ணலிங்கம் ( கலையரசு ) அவர்களே.

யாழ்ப்பாண நாடக வரலாற்றிலே புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்திய யாழ் ஓரியண்டல் நுண்கலை வளர்ச்சிச் சங்கத்தில் நானும் சில காலம் பயின்றேன். சுருங்கச் சொன்னால் கலையரசு அவர்களின் மாணவனாக அவரின் நாடகங்களில் நடிக்கும் பாக்கியத்தை பெற்றேன். அப்பெறுபேறுதான் இன்று இக்கட்டுரையை வரையும் சக்தியைத் தந்துள்ளது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கிளிநொச்சியின் கலைப் பூங்காவிலே பூத்துக் குலுங்கும் நாடக மலர்களிலே சிறப்பான ரோஜாவாக, விருந்தளிக்கும் இளைஞர் கலைவளர்ச்சி மன்றம் அதன் இயக்குநராக இருப்பதால் நான் பெருமைப்படுகிறேன். குறுகிய காலத்தில் பல பிரமாண்டமான சமூக, வரலாற்று நாடகங்களை மேடையேற்றி, மக்களின் கலை உள்ளத்திலே நீங்காத நினைவாக நிலைக்கிறோம். என்றாலும், கடந்த ஆண்டு கரைச்சிப் பகுதி மக்களின் ஏகோபித்த பாராட்டலுடன், கிராமச் சபை இலக்கிய விழாவில் கிடைத்த முதல் பரிசு, கிடைத்த வெற்றி முத்திரைகளுக்கெல்லாம் விஞ்சியதே.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைத் தன்னகத்தே கொண்ட தமிழ்த்தாய் சாதாரண மக்களையும் கவரக்கூடியதாக நாடகக்கலையைத் தனக்கு ஆபரணமாகச் சூடினாள். இதனால்தான் நம்முன்னோர்கள் கூத்தாடுவது ஆத்தாது அவன் செயல் என்றார்கள்.

நாடகக் கலைதான் நமது பழம் பெரும் கலாச்சாரத்தை இன்று பாதுகாக்கிறது என்றால் மறுப்பாரும் உளரோ? மறக்கப்பட்டுவரும் நமது வரலாற்று இலக்கியச் செல்வங்களை மக்கள் மத்தியில் கொண்டுவந்து காட்டும் நாடகக்கலை வளர்க்கும் மன்றங்கள் பெருகவேண்டும். இவற்றின் மூலம்தான் மாபெரும் கலாச்சார ஊடுருவலில் இருந்து தமிழும் தமிழினமும் மீட்சிபெற முடியும்.


நடிப்புக் கலையின் உதவியுடன் தான் நமது பண்டைய பண்பாடு நல்லொழுக்கம் முதலியவற்றை நிலை நிறுத்த முடியும். மறைந்துவரும் இலக்கியச் செல்வங்களை மக்கள் முன் கொண்டு வரும் பொழுது காலத்



1966-ம் ஆண்டு இலக்கிய விழாவின் போது முதல் இடம் பெற்ற
''கடமையின் காவலன்'' என்னும் நாடகம்
கலைவளர்ச்சி நாடக மன்றம், கிளிநொச்சி.



1966-ம் ஆண்டு இலக்கிய விழாவின்போது 2-வது இடம் பெற்ற
''அறத்தின் நிழல்'' என்னும் நாடகம்
ஸ்ரார் நாடக மன்றம் கிளிநொச்சி.



[illegible]



[illegible]

தோடு சேர்ந்த யுக்திகளை நாம் கையாளவேண்டியவர்களாக இருக்கிறோம். யதார்த்த ரீதியான உண்மைகளைச் சமுதாயத்துடன் சேர்ந்து செய்வதன் மூலந்தான் இக் கலைக்கு உண்மையான வளர்ச்சியை நாம் காட்ட முடியும்.

யதார்த்த ரீதியான உண்மைக்குப் புறம் பாகத்தான் அண்ணாவி மரபில் வந்த நாட்டுக்கூத்துகள் இடம் பெற்றன என்று வாதிடும் ஒரு பகுதியினர் நம் மத்தியில் இன்றும் இருக்கின்றனர். உண்மையைச் சற்று உற்று நோக்கின், பழைய கலாச்சாரத்தின் மத்தியில் நிதானமாய் எழுப்பப்பட்ட நாட்டுக் கூத்துகள் நம் மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள கலாச்சாரத் தாக்கத்தால் மடிந்து கொண்டு வருகின்றன. இது ஒரு வேதனைக்குரிய விடயமாகும். பழைய நாட்டுக் கூத்துகளைப் புதிய யுக்திகளைக் கையாண்டு இன்று பல நாடக மன்றங்கள் அரங்கேற்றுவதைப் பார்க்கும் பொழுது மனது சற்று ஆறுதல் அடைகிறது.

நாட்டுக்கூத்தில் இருந்து பிரிக்கப் பட்டுப் புதுமையூட்டப்பட்டதே நாடகம் (ருமா). நாட்டுக்கூத்துக்கு சுரமும் ஆட்டமும் எப்படி முக்கியப்படுகின்றதோ, நாடகத்துக்கு நடிப்பு முக்கியப்படுகின்றது. புதுமை என்ற போர்வையிலே இன்று நாடகங்களில் நடக்கும் அசிங்கங்கள் சொல்லும் தரமன்று. ரசிகர்கள் எல்லோரும் கீழ்மட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நினைப்பில் கிளர்ச்சியைத் தூண்டிவிடும்பால் உணர்ச்சிக் கட்டங்களை நடித்து, அப்புளாஸ், வன்சிமோர், பெறலாம் எனச் சில நாடக நடிகர்கள் நினைக்கின்றனர். இது கண்டிக்கப்படவேண்டியது. இவர்கள் சினிமாவில் இருந்து வந்ததுதான் நாடகம் என்று நினைப்பதுடன் அந்தப் பாணியையே கைக்கொள்வது வேடிக்கையானது. அவர்களுக்கு இதை மட்டும் ஆணித்தரமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். நாடகத்தில் இருந்துதான் சினிமா பிறந்தது.

நாடக மன்றங்களில் செல்வாக்குப் பெற்றவர்கள், இயக்குநர்கள் சிறப்பான பாத்திரத்தைப் பெற்றுப் பொருந்தாத பாத்திரமாகி நாடகத்தையே கண்ருவியாக்கும் சுயநலமிகளின்று மலிந்து விட்டார்கள். நாடகங்களில் நடிப்புக்கு எவ்வளவு முக்கியம் கொடுக்கிறோமோ அவ்வளவு முக்கியம் உருவ அமைப்புக்குக் கொடுக்கவேண்டும். நாகேசுக்கு இராவணன் வேசம் பொருந்துமா?

நாடக மன்றங்கள் வரலாற்று நாடகங்களை மேடை ஏற்றும் பொழுது மிகவும் கலைநுணுக்கோடு அரங்கேற்ற வேண்டும். 8-ம் நூற்றுண்டில் அரசு புரிந்தவர்களின் கதை நாடகமாக்கும்பொழுது அவ்வரலாற்றைத் தெளிவாக உணந்திருக்க வேண்டும். சமூக நாடகங்களுக்கு இத்தகைய கஷ்டங்கள் இல்லாது போனுலும், சமுதாயத்தின் நெளிவு, சுழிவுகளையும் ஏற்றத்தாள்வுகளையும் பாசப் பிணைப்போடு உருவமைப்பு கொடுக்கும்பொழுது அந்நாடகம் சிறப்புறுகிறது.

சமூக நாடகங்கள் பொதுவாக மக்கள் மத்தியில் அன்ருடம் வாழ்க்கையில் யதார்த்தமாக நடைமுறையில் நடக்கும் குற்றங்குறைகளையும்

சமூகக் கொடுமைகளையும் சீர்திருத்தும் நோக்கமாகவே அரங்கேற்றுகிறோம். இவை நடிப்பதில் சுலபம். ஏனெனில் நாம் அன்றாடம் மக்கள் மத்தியிற் காணும் பாத்திரங்களை மனதில் வைத்து அவர்களின் குண நலன்களை மனதில் வைத்து அதற்கு மெருகூட்டி நடிப்பதே சமூக நாடகம். இதில் நாம் கட்டுப்பாட்டிற்கடங்கி நாடக ஒழுங்கில் இருந்து பிறழாது நடக்கவேண்டும்.

சரித்திர நாடகங்களை மேடை ஏற்றுவதிற் திறமையும் இலக்கிய அறிவும் நிரம்பவேண்டும். ஏனெனில் சமூக நாடகத்தில் நாம் காண்பது போல் கதாபாத்திரங்களை நேரிற் காண்பதில்லை. இவர்களை நாம் காண்பதாயின் இலக்கியங்களிலும் சரித்திரங்களிலும் படித்து மனக் கண்ணினுல் உருவமைப்பையும் குண நலன்களையும் அலசி ஆராய்ந்து தத்ரூபமாக அமைக்கவேண்டியிருக்கும். இந் நாடகங்களை மேடையேற்றுவதிற் பணச் செலவும் அதிகம். பொதுவாக இந் நாடகங்களில் வரும் பாத்திரங்களின் உடைகள் விலையுயர்ந்தவையாகத் தோற்றமளிக்கவும், காட்சியமைப்புகள் தத்ரூபமாக அமையவும் வேண்டியிருக்கும். இதனுற்தான் பெரும்பாலான நாடக மன்றங்கள் சரித்திர நாடகங்களைத் தவிர்த்துச் சமூக நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனபோலும். ஆனுல் இக்குறைகளை நீக்கும் முகமாக, கிராம சபைகள், பிரதேச கலா மன்றங்கள் போட்டியென்ற ரீதியில் சரித்திர நாடகங்களை அரங்கேற்ற வாய்ப்பளிக்கின்றது போற்றுவதற்குரிய செயலாகும்.

பொதுவாக கரைச்சிப்பகுதியின் இலக்கிய வளர்ச்சியில் இக்காலக் கிராம சபையின் ஆட்சிக் காலமும் குறிப்பாகத் திரு. வீ. ஆனந்தசங்கரியின் சேவைக்காலமும் ஒரு புதிய சகாப்தமாகும்.

நாடகம் வாழ, வளர, கலையார்வம்கொண்ட இளைஞர் சமுதாயம் முன்வர வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன். வணக்கம்.

— —



# ஆதாரக் கல்விக் குருகுலம்

சி. கனகநாயகம் ஆசிரியர்
இந்து தமிழ்க் கலவன் பாடசாலை கிளிநொச்சி

1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதி நம்நாடு சுதந்திரம் அடைந்தது. சுதந்திரம் அடைந்ததும் இலங்கைக் கொடி மாற்றப்பட்டு விட்டது. ஆனால் மாற்றப்படவேண்டிய பல விடயங்கள் மாற்றப்படவில்லை. அவற்றுள் ஒன்று கல்வியாகும். இந்தியா சுதந்திரத்தைப் பெறுவதற்காகஉழைத்தவர்களுள் முன்னணியில் நிற்பவர் மகாத்மா காந்தி அடிகளாவார். அவர்கள் சுதந்திர இந்தியாவில் எப்படியான கல்வி முறை அமைதல் வேண்டுமெனப் பல ஆண்டுகளுக்கு முன்னரே சிந்தித்து ஒரு புதிய கல்வி முறையைக் கல்வி அறிஞர்களின் முன் சமர்ப்பித்தார். கல்வி அறிஞர்கள் பலர் காந்தியடிகளின் கல்வித் திட்டத்தை நன்கு ஆராய்ந்து அக்கல்வி முறை இந்தியாவுக்கு மட்டுமல்ல அகில உலகுக்கும் ஏற்ற ஒன்றே எனத் தீர்மானித்தனர். காங்கிரஸ் கட்சியினரும் அக்கல்வி முறையைத தேசியக் கல்வியாக ஏற்றுக்கொண்டனர். அக்கல்வியே ஆதாரக் கல்வியென அழைக்கப்பட்டு வருகின்றது.

காந்தியடிகள் வெறும் பேச்சாளரல்ல. அவர் பெரும் செயல் வீரர். தாம் சமர்ப்பித்த கல்வி முறையை நடைமுறையில் ஆராய்ச்சி பண்ணிப் பார்ப்பதற்காக ''வர்தா'' என்ற இடத்தில் ஆதாரக் கல்வி ஆராய்ச்சி நிலையமொன்றைத் தொடக்கி திரு. அரியநாயகம் தம்பதிகளிடம் ஒப்படைத்தார். திரு. அரியநாயகம் அவர்கள் இலங்கையில் வட்டுக்கோட்டை என்ற ஊரைச் சேர்ந்தவராவார். அவர் மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்வி பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் பெரும் பட்டங்கள் பெற்றவர். வங்கக் கவியாகிய ரவீந்திரநாத்தாகூருடைய செயலாளராக விளங்கியதோடு அவரது உலகப் புகழ்பெற்ற சாந்தி நிகேதன நிலையத்தில் பேராசிரியராகவும் கடமையாற்றியவராவார்.

கிளிநொச்சிப் பகுதியில் சைவ மக்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்ற நோக்கோடு 1952 இல் ஆரம்பிக்கப்பட்ட சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினர் திரு. அரியநாயகம் அவர்கள் இலங்கைக்கு வந்த பல சமயங்களில் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்கள் பல எற்பட்டன. "வெறும் ஏட்டுக் கல்வியால் மட்டும் பயனில்லை. தொழில் மூலம் அறிவை வளர்க்கும் ஆதாரக் கல்வி முறையே சுதந்திரம் பெற்ற இலங்

கைக்கு ஏற்றதாகும். இலங்கை பொருளாதாரத்தில் வளர்ச்சியுற வும் அனுமான் வால் போல் ஆண்டுதோறும் பெருகி வரும் வேலையற்றோர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஆதாரக் கல்வியே கைகொடுத்து உதவும்'' என்ற திரு. அரியநாயகம் அவர்களின் ஆலோசனைகள் இச்சபையாரின் உள்ளங்களிலும் உருவாகத் தொடங்கின. ஆண்டவன் அருளால் ஆதாரக்கல்வி தீவிர பற்றுக் கொண்டு ஓராண்டுசம்பளத்தையே விட்டுத் தமது சொந்தச் செலவிலேயே இந்தியா சென்று இக்கல்வி முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர் திரு. கதிரவேலு அவர்களின் தொடர்பும் இச் சங்கத்தினருக்கு கிடைத்தது. பலரின் பகீரதப் பிரயத்தனத்தால் பேராதனையில்பணி புரிந்த திரு. கதிரவேலு அவர்கள் 7-ம் வாய்க்கால் இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மாற்றலாகி வந்தார். அவர் வரவால் சபையின் பணிகள் விரிவடையத் தொடங்கின. பழைய குருகுல முறையும் புதிய காந்திய முறையும் ஒன்று சேர்ந்து ஆதாரக்கல்வி முறையில் மாணவர்கட்குப் பயிற்சி அளித்து ஒரு சிறந்த இலட்சிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்கமாக 24-2-64-இல் ஒரு குருகுலம் ஆரம்பிக்கப்பட்டது.

இக்குருகுலம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இன்று நாற்பது பிள்ளைகட்கு இலவச உணவளித்து நல் வாழ்வுப் பயிற்சியும், விவசாய, நெசவுத் தொழிற் பயிற்சிகளும், அளித்து வருகின்றது. இன்னும் ஆகவேண்டிய பணிகள் பல உள. அரசாங்கம் அளித்த 50 ஏக்கர் நிலத்தில் பலவகைப் பயிற்சி நிலையங்கள் அமைத்துப் பாலர் முதற் பாட்டன் வரையுள்ள அனைவருக்கும் நற்பயிற்சி அளித்து ஒரு சிறந்த முன்மாதிரியான சமுதாயப் பண்ணையாக விளங்க வேண்டுமென்ற பெருவிருப்பமே இன்று சபையின் நோக்கமாக உள்ளது. நினைப்பதெல்லாம் நடந்து விடுமா? தெய்வ அருளும் தேசப் பற்றுள்ள பெருமக்கள் பொருளும் பெருமளவு வேண்டியுள்ளன. அவையாவும் கிடைத்து சபையினது பெருவிருப்பம் அனைவர்க்கும் பயனளிப்பதாக.

---



'காந்தி நிலையம்' குருகுலத்தின் விடுதி மண்டபத்தின் தோற்றம்



உருத்திரபுரம் கத்தோலிக்க திருச்சபையின் ஆச்சிரம குருவும் மாணவர்களும்

# ஆரோகணம்

சிவப்பிரகாசம்

சேற்றின் மத்தியில் செந்தாமரை மலர்ந்திருப்பதுபோல முட்கள் நடுவில் லீலி மலர்கள் மலர்ந்திருப்பது போல, வானளாவி வளர்ந்திருக்கும் மரங்களின் கிளைகள் நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பரவிப் பின்னிக்கொண்டிருக்கும் வனப்பிரதேசத்தின் மத்தியில் அழகாக இந் நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரதேசம் குடியேற்றத் திட்டமாக்கப்பட்ட காலத்திலேயே இந் நிலையமும் உருவாக்கப்பட்டது. மனோகரமான காலை நேரத்தில் ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களின் உச்சியில் வசந்த காலத்தின் இளந் தென்றல் உலாவிவரும் போது அசையும் இலைகள் சல சல வென்று இனிய ஓசையை எழுப்பிக் கொண்டே இருக்கின்றன. பறவை இனங்கள் கண்டங்களிலிருந்து விதவிதமான சுருதி பேதங்களுடன் மதுரகீதங்கள் பெருக்கிக் கொண்டே இருக்கின்றன. முற்றத்தின் இருமருங்கிலும் உள்ள பூஞ் செடிகள் இந் நிலையத்தை அழகுக்கு அழகு செய்துகொண்டிருக்கின்றன. திசைகளெட்டுமிருள் விரிய சுந்தர தாரகை அந்தரத்தே கண்சிமிட்டி நிற்பதுபோன்று மாலை நேரத்தில் மின் விளக்குகள் இருளை அகற்றி ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. இத்துணை இன்பத்தையும் தன்னகத்தே கொண்டதான இந்நிலையம் ஏழைச் சிறுர்களுக்குப் புத்துயுருட்டிப் புதுவாழ்வை அளிக்கின்றது.

''குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள் அவர்களைத் தடைசெய்யாதிருங்கள், ஏனெனில் கடவுளின் அரசு இத்தகையோரது''! கடவுளின் அரசை மானிலத்தில் மாசுமறுவற்ற மாணிக்கங்களான குழந்தைகளைப்போல் ஏற்காத எவனும் மோட்சராட்சியத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று கூறினார் கிறீஸ்து. கிறீஸ்து இரக்கமுள்ளவர். அவரில் அன்பும் இரக்கமும் என்றும் நிலைத்திருக்கின்றன. இந்த அன்பும் முடிவற்ற கிருபையும் கிறீஸ்துவிடத்தில் நிலைத்திருப்பதுபோன்று, இந் நிலையத்திலும் அன்பும் கிருபையும் நிலைத்திருக்கின்றன. வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கி இலட்சியத்தை வளரச் செய்கின்றது. அன்னையின் அரவணைப்பின்றித் தந்

தையின் பாதுகாப்பின்றித் தவிக்கும் சிறுர்கள் அன்னையின் அன்பையும் தந்தையின் பாதுகாப்பையும் ஒருங்கே பெறுவதைப் போன்று வளர்க்கப்படுகின்றுர்கள்.

பெற்றுர்களின் கண்காணிப்பில் இருக்கும் சிறுர்கள் எவ்வாறு தெய்வ பக்தி நிறைந்தவர்களாக வளர்க்கப் படுகின்றுர்களோ அவ்வாறே இந் நிலையத்தின் ஆதரவில் கண்காணிக்கப்படும் சிறுர்களும் தெய்வ வழிபாடுள்ளவர்களாகவும் சமயப் பற்று நிறைந்தவர்களாகவும் வளர்க்கப்படுகின்றுர்கள்.

'' கற்றதனுலாய பயனென்
கொல் வாலறிவன் நற்றுள்
தொழா அரெனின் ''

என்றுர் நமது திருவள்ளுவனுர். கல்விப்பயன் கடவுட்டொழல் என்பது அம் மறை மொழியின் கருத்து. மத பக்தியிலும் கல்வி உணர்ச்சியிலும் வளர்க்கப்படுகின்றுர்கள்.

கல்வியைப் பொறுத்த வரையில் பிள்ளைகளில் அவரவர் இயற்கையிலே எந்தெந்தத் துறையில் எவரெவர் திறமைசாலிகளோ அவரவருக்கு ஏற்றபடி அத்துறைகளில் நன்றுகப் பயிற்றப்படுகின்றுர்கள். தெய்வ பக்தியில் மாத்திரம் பயிற்சி பெருமல் செல்வத்துள் செல்வமாகிய உலக கல்வி ஞானமும் பாகுபாடின்றிப் பெறுவதற்குப் போதிய வசதி உண்டு.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது. முதுமொழி. நல்ல தேக ஆரோக்கியமே பலமுள்ள சமுகத்தின் அடிப்படையாகும். இம்முது மொழிக்கிணங்க இங்கு போசாக்கு நிறைந்த உணவு இவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. அதனுல் நோயின்றி சுகதேகிகளாகவும் தேகப்புஷ்டி உள்ளவர்களாகவும் இருக்கின்றுர்கள்.

உள்ளத்தில் உண்மைக்கு முதலிடம் கொடுக்கும் உத்தமர்களுக்கு கிறீஸ்துவை அறிய ஆசிக்கும் வகையிலும் வேறு பலவிதப்பட்ட சஞ்சிகைகளையும் குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் வெளியிடுகின்றுர்கள். அச்சுக் கோர்த்தல், அடித்தல், மேற்பார்வை செய்தல், போன்ற பலதிறப்பட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவர்களுடைய ''ஆரோகண'' அச்சகத்தில்.

கொல்லக் கம்மாலையிலிருந்து தேவைக்கதிகமான ஆயுதங்களையும், தச்சக் கம்மாலையிலிருந்து அதிகமான தளபாட வகைகளையும உற்பத்தி செய்து தொழில் வளத்தையும், நுணுக்கத்தையும் பெருக்கிக் கொள்ளுகின்றனர்.

இவர்களின் அயராத உழைப்பும் விவேகமும் சிந்தனையும்தான் இன்று இந்நிலையத்தின் சுற்றுப்புறப் பகுதியையும் நிலபுலங்களையும் வளம் கொழிக்கும் நெல் வயல்களாகவும் தோட்டங்களாகவும் மாறியிருக்கின்றன. '' தொழுதூண் சுவையில் உழுதூண் இனிது '' என்ற முதுமொழிக்கொப்ப இங்கு விவசாயம் செய்வது குறிப்பிடத் தக்கது. இங்கு நெல்லு சிறிதளவு உற்பத்தி செய்தாலும், உணவின் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தோடு பலவாறு முயற்சி எடுக்கப்

படுகின்றது. பன்றிப் பண்ணையும் மாட்டுப் பண்ணையும் உண்டாக்கிச் சிறப்பாக வேலை ஆற்றுகின்றனர். இவ்வித தொழில் முறைகள் இங்கு நடைபெறுவதினால் உணவுப் பிரச்சினையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு குறைகின்றது.

ஒருவன் பஞ்சணையில் துயில்கின்றான், இன்னொருவன் தெருவிலே மணலிலே பாறைக் கல்லிலே துயில்கின்றான். எவ்விதம் இந்த ஏழை தன் படுக்கையைப் ''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' எனத் திருப்தியோடு ஏற்றுக்கொண்டானோ அவ்விதமே இந்த ஏழைச் சிறார்களும் தமது சீவியத்தை போதுமென்ற மனத்திருப்தியோடு ஏற்றுக் கொள்கிறார்கள். பெரிய ஞானிகள் பலநாள் வாழ்ந்து இறைவனைப் பரவி வீட்டுப் பேற்றை அடைவதும் போதும் என்ற மனமேயாகும்.

வணக்கம்.



# இலக்கிய இன்பம்

அரவிந்தன்

*1966-ல் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை.*

ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்று நன்றே
செய்யவும் வேண்டும்.
நன்றும் இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்— கபிலர்

இலக்கியம் எண்ணும்போது எம் கண்முன் நிற்பது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் தீங்கனிச்சாரும் ''இராமாயணம்'' தான். தனித் தமிழ் இலக்கியங்களான மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி சிலப்பதிகாரம் - வளையாபதி ஆகிய தமிழ் அன்னையின் அணிகலன்கள் ஐந்தையும் எண்ணிப் பார்ப்பதில்லை. ஏன் இந்த இழிநிலை- ஏன் இந்தத் தாழ்வு மனப்பான்மை. கோட்டும் சூட்டும் மாட்டிவிட்டால் மில்ட்டனையோ, ஷேக்ஸ்பியரையோதான் படிக்கவேண்டும் என்ற நிபதியுண்டா? காற்சட்டை மாட்டிவிட்டால் கன்னித்தமிழ் நாவில் புரளமறுக்கும் இந்நாளில் எழுதப்பணிககப்பட்ட விடயம் 'இலக்கிய இன்பம்' கம்பனின் காவியத் திறனை கரும்பென இனிக்கும் கவித்திறனை வரவேற்கின்றேன். ஆனால் அது ஒரு வட மொழிச் சரக்கென்பதை உணரும்போது தலைக்குனிவாக, நிறைவற்ற மனமாக நினைத்துமகிழ முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. தனித்தமிழ் இலக்கியங்கள் இருக்கும்போதா எமக்கிந்த இழிநிலை... இந்நிலை மாறவேண்

டும்... மாறும்பட்சத்தில் கற்பின் கனலி யின் பெயர் மட்டுமல்ல எம்மினப் பெய ரும் பெருமையுடன் உருபடி உயரும் நம்மை, நம் பண்பை, நம் இனவளர்ச்சி இலக்கியங்களை ஏனோ மூடிமறைக்கின்ற னர் யானறியேன். இதனால் நம் இனத் திற்கே நாம் துரோகமிழைத்தோராவோம்.

இலக்கியத்தை நுகரவேண்டுமானால் எமக்குப் பொறுமைவேண்டும்.. அத்து டன் ஓர் ஈடுபாடும் வேண்டும் அதே போல்தான் தேவாரம், திருவாசகம் முத லியபிறவும், சுந்தரர் சிவபெருமானை நோக்கிப்பாடுகையில்

> நங்கையைப்பாகம் வைத்தாய் கங்
> கையை முடியில்வைத்தாய்...

என்கின்றார்: இதில் இனிமையைக் கவனியுங்கள். அதில் ஏலாமையும், தாள மையும் வெள்ளிடை மலையெனவிளங் கவில்லையா.. நீ மட்டும் உன் இஷ்ட்டப் படி பக்கத்தில் ஒன்றும், தலையில் ஒன்று மாக இரு கன்னியரை வைத்திருக்கின் றாயே.. ஆனால் அது எனக்கு முடியவில் லையே என்ற ஒலிக்கவில்லையா...? மீண் டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் கரும் பின் இனிமையை கடித்தே உணரவேண் டும். இலக்கிய இன்பத்தைப் படித்தே உணர வேண்டும். கன்னியின் கனிவை அணைத்தே உணரவேண்டும் என அடித் தெழுதுகின்றேன். காதலின் சுவையை பிரிவின் தாபத்தை, ஊடலின் தத்து வத்தை, கூடலின் குளுமையை வீரத் தின் விறுவிறுப்பை நுகரவேண்டுமானால் ஆர அமர இலக்கியக் கடலில் நீச்சலடி யுங்கள். அப்போ புத்தம்புதிய உரையும் புதிய உத்வேகமும் கண்டிப்பாக உண் டாகியே தீரும்..

பெண்ணே, நீ பொண்ணனவள், உன் தாயின் அன்பும் சேவைத் திற னும், பூமியின் பொறுமையும், மந்திரியின் மதியூகமும் இன்பமளிப்பதில் (கணவ னுக்கு) விலை மகளிர் திறனு உண்டு உன்னிடம் என்று விண்டுடைக்கின்றான் கேள்,

> அன்னைதயையும் அடியாள்பணியு
> [மலர்ப்
> பொன்னினழகும் புவிப்பொறையும்
> [வன்னமுலை
> வேசிதுயிலும் விறன்மந்திரி மதியும்
> பேசிலிவையுடையாள்பெண்

மனம் அது விசித்திரமானது.. முன் னுக்குப்பின் முரணனது .. கற்பனைக் கன வின் பிரதிநிதி மனம். காதலன் மனம் காதலியின் எண்ணச் சுழலில்... சேயின் மனம் தாயின் அணைப்பில் .. பெண்ணை நாடும் ஆணின் மனம்... அழகாகக் கூறு கின்றான்... படித்துப்பார்:

> எண்ணத்தறியில் சிறுநினைவு
> இழையோட இளையோட
> முன்னுக்குப்பின் முரணாய்
> முற்றும் கற்பனையாய்
> பன்னும் பகற்கனவாய்
> பாழாய் பழம் பொருளாய்
> என்னென்ன நினைக்கின்றாய்
> ஏழைச் சிறுமனமே

சீவக சிந்தாமணியில் சீர்மிகுபாடல் ஒன்றை எடுத்துக்கொள்வோம் அவள் சந்திரவதனம் கொண்டவள்... கரமோ... மென்மையான பூவையொத்தவை. அத் தங்கமேனிகொண்ட மங்கை நல்லாள் நாவல் மரத்தினோரமாகச் செல்கின்றாள். நாவலோ... பதினாறும்கடவாப் பருவப் பெண்போல் பழுத்துக் குலுங்குகின்றது. நங்கைக்கோ நாவில் நீரூருகின்றது. குளிர் நிலாமுகம் மண்ணோக்க .. மலரன் னமென்கரம் நீள்கின்றது... காந்தள் மெல்விரல் கனியில் படியும்போது அதிச யம் நடந்துவிடுகின்றது .. பழம் பறக் கின்றது... பறக்கும் பழத்தைக்கண்டு கள்ளுறும் கனியிதலாள் மெய்நடுக்கம் கொண்டாளாம்... பங்கயக்கன்னி பருவப் பெண்ணல்லவா? பழம் பறந்துவிட்டதே என்று பாகுமொழியால் துடிக்க .. பழம் எப்படிப் பறக்கும் என்று படிக்கும் நாம்

திகைக்க புலவனே புதிரை அவிழ்க்கின்ருன்.

வேல்விழிவை வாளிணை ஏத்ததென்ருன்... மேகம் போன்ற கரும் கூந்தல் என்ருன்.. அவள் பாதாரவிந்தத்தை மாந்தளிர் என்ருன்... மறைவிடம் பொற்தேரென்ருன்.. கையைக் காந்தள் என்ருன்... இடையை இல்லையோ என்னும்படி மெல்லியதென்ருன்... இன்று எங்கே... இல்லையோ அந்த மெல்லிடையாள்... கங்கை தங்கும் கொங்கை குரும்பையென்ருன்... பெண்ணையே நம்முள் உலாவவிட்டு விட்டான் தஞ்சை வாணன்...

இலக்கியங்களைப் புரட்டும்போது எழிற் கனனியரைக் காண்கின்ரோம். ஏறு போல் இளவல்களைக் காண்கின்ரோம்.. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய அருங்குண அன்னங்களைக் காண்கின்ரோம். கற்பை நெருப்பெனப் போற்றிய நம்மினப் பெண்டிரைக் காண்கின்ரோம். இன்று காணத்துடிக்கும் எமக்கு இலக்கியப் பெண்டிர் கிடைப்பரா..? சீர்மிகு சிலப்பு எங்கே.? சீவகசிந்தாமணி எங்கே? மாசறுமலர்க் கொடி மணிமேகலை எங்கே இவையெல்லாம் மண்ணோடு மறைந்தவர்கள்தானு, மீண்டும் ஒரு மணிமேகலை... வேண்டும் ஒரு கண்ணகி தமிழ் குலத்தில் கண்ணகி மணிமேகலை தோன்ருத வரைக்கும் இலக்கியம் என்று வாயசைக்கவே லயக்கற்றவராகின்ரோம். எனதருமைத் தாய்க்குலமே ஊருக்கொரு இலக்கியப் பெண்ணை நாட்டிற்கொரு கண்ணகியை .. வீட்டிற்கொரு மணிமேகலையை உலாவவிடுங்கள் என உள்ளன்புடன் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பெண்ணே .. இதைப்படிப்பதால்... இதை உணர்வதால் மீண்டும் பல கண்ணகிகள் தோன்ற நீ வழி வகுப்பாயென்ருல்... இலக்கிய மணம் இல்லந்தோறும் கமழச் செய்வாய்யென்ருல் அதுவே நாட்டிற்கும் .. நம்மினத்திற்கும் நீ செய்யக் கூடிய பெருமையூட்டக்கூடிய செயல் என்று .. உன்மனரன்ன உள்ளத்திற்குத் தோன்றுமெனில் .. நீயே ஒரு இலக்கிய மகளாக! நீயே- ஒரு கண்ணகிய வாழ்வாயென்ருல்... தமிழ் குலம் உள்ளளவும் தாய்க்குலம் உன்னை வாழ்த்தும் மீண்டும் உன்மலரன்ன இதயத்தில் பதிய வைக்க ஆவலுறும் யான்... இதை வாசிப்பதன் மூலம் உன்போன்ற சிலரிடமாவது... அறிவும், அமைதியும், அன்பும் கொண்ட பெண்ணினத்தை உருவாக்க வேண்டுமென்று தோன்றுமானல் இலக்கிய மகளிர் .. இன்றில்லையென்று சொல்ல இடமளிக்காது ஒரு இலட்சிய மகளாக- இலட்சியக் கன்னியாக... வாழவேண்டும் என்று தோன்றுமானல் என் கட்டுரையின் ஒருபகுதி நிறைவு பெற்றதாக மனம் மகிழ்வேன்... அப்படி வாழும்... மடவன்னத்தை நாடு பேற்றும்... ஏடு போற்றும்.. நற்றமிழ் அன்னை போற்றுவாள்... அப்படி வாழ் என சிரம் தாழ்த்தி கரம் குவித்து மலரன்ன மங்கயர் சமூகத்தை கேட்டுக் கொள்கின்றேன்.

தேனுகர்வண்டு மதுதனையுண்டு
நியங்யேகிடந்ததைக்கண்டு
தானதைச்ம்புவின் கனியெனநினைத்து
தடக்கையால் எடுத்துமுன்பார்த்தாள்
வானுறுமதியம் வந்ததென்றெண்ணி
மலர்க்கரம் குவியுமென்றஞ்சி
போன்துவண்டோ? பறந்ததுபழமோ!

கனியின் மேல் காதல் கொண்ட கனியிதலாளுக்கு வண்டிற்கும் பழத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை. தேனையுண்ட மயக்கத்தில் பழத்தோடு பழமாக வண்டு கிடக்கின்றது காந்தள்மென்விரல்பட்ட அதிர்ச்சியால் மயக்கம் தெளிந்தவண்டு வெறித்துப்பார்க்கின்றது .. கன்னியோ கையில் உள்ளகனியை ஆசை கனிய நோக்குகின்ருள்... வண்டோ... மதியன்ன முகத்தைக் கண்டு ஐயய்யோ... நிலவு உதயமாகி விட்டதே .. நான் குமுதமலரினுள் அல்லவா இருக்கின்றேன். குமுதம் குவிந்துவிடுமல்லவா...?

குமுதம் மலரவேண்டுமாயின் மீண்டும் ஆதவன் உதயமாகவல்லவா வேண்டும் என்று எண்ணுகின்றது. சிறகு விரிகின்றது, பறக்கின்றது வண்டு... புலவனே, பழமா.. வண்டா பறந்தது என்று முடிப்பதன் மூலம்... நம்மையும் நேரில் ரசிக்க வைக்கின்றான்... இதே வண்டு .. இதே பெண... இன்றில்லையா? இன்றில்லையாயின் அன்றைய அரவிந்த மாலாள் இறந்துபோய் அவளின் அரவிந்தக் குலமே அழிந்து போய் விட்டதா..? அடுத்து புகலேந்தியின் புகழின் வெண்பாவாம் நளவெண்பாவைப் புரட்டுவோம். வாசகரே... சற்றே என்னுடன் வருகின்றீரா... மலர்மணம் மனதைக் கவர்கின்றதா... அதோ... தலைவனும் தலைவியும்... இதோ... மலரன்ன மங்கை மடவன்னம்... மங்கை மடவன்னத்தின் மேல் மயக்கம் கொள்கின்றாயா... அதை விட இதோ... புலவன் தரும் புத்தம் புதுமதுவைச் சிறிது அருந்திச் செல். மலரன்ன மங்கை... காந்தன் மென்விரல் கொண்டு மதுநிறை மலர் கொய்கின்றான்.. அதைக் காணும் பெண்ணானவள் மலர் தூவிய மஞ்சத்தில், குளிர் பன்னீர் தடவி.. மஞ்சமேறும் மதிவதனி தமயந்தி... ஏறு நடையும்... எழில் மிக்கவனுமான... நளன் இருவருமே மதுரசமல்லவா... நளன்... தன்கட்டிலறைப் பெட்டகத்திற்கு பூவையொருத்தி பூக் கொய்யும் காட்சியைக் காட்டுகின்றான் வாசகரே... நீரும் அக்காட்சியைக் காண விழைவீரென எண்ணுகின்றேன்:

மங்கையொருத்தி மலர் கொய்வாள்
வான் முகத்தைப் பங்கய மென்
[றெண்ணி
படிவண்டைத் தன்கையாற் தள்ள
கைமலரை காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைச் காணென்றான் வேந்து...

வண்டோ மலரில் படிந்து, படிந்து தேனுண்கின்றது... ஆனால் தேனருந்துவதற்கு ஏதோ தடையாக இருப்பதை உணர்ந்து மேல்நோக்குகின்றது... ஆனந்தம் வண்டிற்கு .. மங்கையின் மலரன்ன முகத்தைக் கண்டு... பங்கயமென் றெண்ணி மங்கையின் மலர்முகத்தில் படிகின்றது. வண்ணமுகத்தாளோ... மலர்க்கரம் கொண்டு வண்டைத் தட்டி விடுகின்றாள். பங்கய மலரென்று முகத்தில் படிந்த வண்டு காந்தள் எனக்கையுள் படிந்தெழுகின்றது... முகத்திலும் கரத்திலும் வண்டு படிவதால் மலர் கொய்த... மலர்மேனியாள் உடல் சிலிர்க்கின்றது. ஊடி சிலிர்க்காத உள்ளம் கூடிச் சிலிர்க்காத உள்ளம்... வண்டு படிவதால்... சிலிர்க்கின்றது. இதைத்தான் தலைவன் தலைவிக்குக் காட்டுகின்றான். காட்டுவது தலைவனாயில் காண்பவள் உள்ளம் கனியாத காதலால்.. இனியாத ஊடலால். மலரில் படியும் வண்டே மங்கைமேல் படிவதாயில் அவளின் அழகு உவமைக்கு அப்பாற்பட்ட ஒன்றல்லவா?

மங்கை மலர் போவாள் என்று புலவன் கூறக் கண்டு அன்னநடையாளை சின்ன இடையாளை .. காண .. காதலின் பம் பேண எம்முள்ளம் துடிக்கின்றதல்லவா...? எமதுள்ள உணர்வுகளை தூண்டிவிட்டு உவமை அணிகள் மூலம் எம்மை சாதல் மயக்கம் கொள்ளச் செய்து விடுகின்றானே புலவன்... இப்படியான சின்ன இடையையும் வண்ண மேனியையும் தேனிதழையும்... வேல் விழியையும்... மதிமுகத்தையும் .. காண்போமா என்று ஏக்கம் ஏற்படவில்லையா? இனிமையை நுகர, உணர்வுமூலம் தெய்வப் பெண்டிருடன் இன்பம் துய்க்கப் பொறுமைவேண்டும். மீண்டும் மீண்டும் அசைபோட வேண்டும் இலக்கியப் பெண்டிருடன இனிய நறுமலர்ச் சோலையூடே நாமும் கைகோர்த்து உலாவித் திரும்ப வேண்டும் அவர்களை வெற்றி கொள்ள வேண்டும் எனத் துடிக்கும் ஒவ்வொரு இளம் உள்ளத்திற்கும் அரவிந்தனின் ஆசிகள்.

# ராஜா ஸ்டோர்ஸ்

**விற்பனையாளர்கள்:**

சாய்ப்புச் சாமான்கள், விவசாய மருந்து வகைகள்

✱ என்கறின் ✱ என்ரெக்ஸ் ✱ பொலிடோல்

மற்றும்

மற்றும் உரம் பசளை முதலியனவும்.

உரிமை: தி. பாலசுப்பிரமணியம் சந்தை, கிளிநொச்சி

நங்கையர் விரும்பும் நவ நாகரீக நகைகளுக்கும்



வைரங்களுக்கும்

புகழ் பெற்று விளங்கும் ஸ்தாபனம்

## கே. என். எம். மீறூன் சாஹிப்

''தங்கப் பவுண் நகை மாழிகை''

கன்னாதிட்டி — யாழ்ப்பாணம். தொலைபேசி: 583

*VISIT—*

## K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANTS

*'SOVEREIGN PALACE'*

KANNATHIDDY — JAFFNA. T' PHONE: *585*

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

234, கே. கே. எஸ். ரோட்
யாழ்ப்பாணம்.

புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | இந்து சமைய பாடம் | 4 00 |
| 2 | உயிரியல் | 12 80 |
| 3. | ஆரம்ப பொருளியல் | 6 00 |
| 4. | பாரதச் சுருக்கம் | 3 75 |
| 5 | உடநல சாஸ்திரம் | 6 50 |
| 6 | இலங்கைச் சரித்திரம் | 5 25 |
| 7 | உலக சரித்திரம் | 6 00 |
| 8. | சங்கீத சாஸ்திரம் | 7 00 |
| 9. | தமிழ் இலக்கிய விளக்கம் | 3 50 |
| 10. | இன்பத் தமிழ்ப் பயிற்சி— 2-ப் வகுப்பு தொடக்கம் 5-ம் வகுப்பு வரை | |
| 11. | கணிதப் பயிற்சி 2—5 | |
| 12 | குடியியல் 6, 7, 8, | |
| 13 | தமிழ் அறிவு | 3 75 |
| 14. | 5-ம் வினைப் பத்திரங்கள் | 1 75 |
| 15. | தமிழ் இலக்கிய வினவிடை | 1 75 |

## செல்லப்பா எஞ்சினியரிங்

வேக்ஸ்

எலக்றிக் வெல்டிங், ரிங்கறிங்

கேற்கிறில் வேலைகள்

குறித்த தவணையில் செய்து
கொடுக்கப்படும்.

உரிமை: செ. நமசிவாயம்

கண்டி வீதி　　கிளிநொச்சி

## சிவம் ஸ்ரோர்ஸ்

எம்மிடம்

அலுமினியப்பாத்திரங்கள்,
பலசரக்குச்சாமான்கள்,
திறம் புகையிலை,
V. S. K. சுருட்டு

மற்றும்

சமையலறைக்குத் தேவையான தளபாடச் சாமான்கள்யாவும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

முல்லைத்தீவு வீதி　　பரந்தன்

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

## மனோகரா லோன்றி
**Manohara Laundry**

சாயம் போடுதல்,
றைக்கிளீன் செய்தல்
போன்றவற்றின் மூலம்
உங்கள் ஆடைகளுக்குப்
புத்தொளி வீசச் செய்யலாம்.

உரிமையாளர்:
**S. சின்னத்துரை**

கரடிப் போக்கு,　　கிளிநொச்சி.

*Call At:*

# VARATHAN STORES

**KILINOCHCHI**

FOR ALL YOUR REQUIREMENTS.

*Dealers in:*

*ALL KIND OF TOYS & VEGETABLES*
*OILMAN GOODS, GROCERIES, GRAINS,*
*ROPES & SUNDRIES ETC.*

SATISFACTION GUARANTEED.

AGENT FOR: P. V. M ORANGE BEEDI

KANDY ROAD, KILINOCHCHI.

# LUCKY STORES

KANDY ROAD, KILINOCHCHI

# FANCY PALACE

KARADIPPOKKU.

*LEADING HOUSE FOR.* TEXTILES & SUNDRIES
Cheapest in price &
Latest in Design,
Textiles of C W. E. for Coupons

எங்களிடம்:

திருமண வைபவங்களுக்கேற்ற, லங்கா மணிப்புரி சாரிகளும், கைத்தறி வேட்டி, சால்வை, சிறந்த சேட், காற்சட்டை, கோர்ட் துணிகளும், கூப்பனுக்காகிய பிடவைகளும், சாய்ப்புச் சாமான்களும் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

லக்கி ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி, கிளிநொச்சி

பென்சி பலஸ்.
கறடிப்போக்கு.

Prop. S. B. Muthuthamby.

# பாப்பா ஸ்ரோர்ஸ்

றேடியோ, உபகரணங்கள்

மற்றும்

மின்சார உபகரணங்கள்

**விற்பனவும், திருத்துபவரும்.**

குறித்த தவணையில் ஆடர்கள் தவருது
செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

**உரிமையாளர்: ச. சிதம்பரப்பிள்ளை**

**கண்டி வீதி, கிளிநொச்சி.**

# வேல்ஸ் றேடியோ

**உங்கள் றேடியோ பழுதடைந்துவிட்டதா?**
இன்றே விஜம் செய்யுங்கள்
வேல்ஸ் றேடியோவுக்கு.
குறைந்த செலவிற் சிறந்த முறையிற் திருத்திக் கொடுக்கப்படும்
அத்துடன்
திருமண வைபவங்களுக்குக் குளிர்பானம் விரும்பிய சோடா
குறைந்த செலவிற் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த முறையில்
**ஒலிபெருக்கியும், ரேப் றைக்கோட்டும்**
உங்களை ரசிக்கவைக்கும் மின்சார உபகரணங்களும்
விற்பனவிற்கு உண்டு. இன்றே ஓடர் செய்யுங்கள்

உரிமையாளர்: **வே. பெ. பொன்னம்பலம்**

**வேல்ஸ் றேடியோ**
**கண்டி றேட்,**
**கிளிநொச்சி.**

புத்தர் **கோவிலுக்கு** முன்னே.



கருணைநிலைய ஆச்சிரம நிர்வாகியும் மாணவிகளும்



நவஜீவனம் நிலைய புதுக்கட்டிடத்தை வண. அருள் தம்பிராஜா
அவர்களின் பாரியார் திறந்து வைக்கிறார்.

தஞ்சைவாணன் தரும் இனிய இளம் மதுமலர் தன்றைக் காட்டி உங்களிடம் இருகரம் கூப்பிவிடைபெற விழையுமுன்:

தாளிணை மாந்தளிர் அல்குல் பொன்
தேர்இடை சங்கை கொங்கை
கோளிணைக் கோலக் குரும்பைகை
காந்தள் கொடிக்கரும்பார்
தோளிணை வேய் முகம் திங்கள் செவ்
வாயிதழ் தொண்டையுண் கண
வாளிணைவார் குழலாய் வாணண்
மறையெம் மண்ணுயிர்க்கே

தலைவியிடம் தூது செல்லத் தோழியை கேட்கின்ருள்... அன்னவள் பெயரைக் கூறவில்லை. ஆனல் வதனம்... அதுமதி யென்ருன்... கோவைக் கனியுண்ட செவ் விதழ் தேனிதழ் என்ருன்.

பெண்ணே... பொன்மலரே...! நீ நல்லவள்... வல்லவள் வரலாறு போற் றும்படி வாழக்கூடியவள் என்பதை மறந்துவிடாதே. இதைப் படிப்பதன்மூலம் இலட்சியக்கனவு ஏற்படுமானல்... படித் ததால் நீயும் . எழுதியதால் நானும்... நம்மால் நாடும் பெருமைப்படும். இலட் சியப் பெண்ணுக, இலக்கிய இனியவளாக நீ வாழ்வாயென்ற நோக்கத்துடனும் இலக்கியமகளீர் இன்றில்லை என் போர்க்கு ஏனில்லை என்று கேட்க ஆயிரம் ஆயிரம் பொன்னிதயங்கள் முன்னிற்கும் என்ற ஆசைக் கனவுகளுடன் இலக்கிய இன் பம் செறிந்த இனிய வணக்கம் கூறி எனதருமை வாசகரே உம்மிடமிருந்து விடை பெறுகின்றேன்.

---

# நவஜீவனத்தின் ஆண்டு!

1967-ம் ஆண்டு சித்திரை மாதம் 29-ந் திகதி நவஜீவனம் தனது எட்டுவருடத்திருப்பணியை இவ்வண்மையில் முடித்து ஒன்ப தாம் வருடத்தில் பிரவேசிக்கும் இத் தருணத்தில் காலங்களுக்கூ டாக எங்களைத் தொடர்ந்தும், ஆட்கொண்டும், ஆசீர்வதித்துக் கொண்டும் வரும் கடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி இவ்வ றிக்கையைச் சமர்ப்பிக்க விரும்பு கிறேம்.

"பணிக்கும் ஆயத்தம்
பலிக்கும் ஆயத்தம்"

என்னும் குறிக்கோளைக் கொண்ட நாம் எவ்வாறு இவ்விலக்குக்கும் அழைப்புக்கும் பாத்திரவான்களா யிருந்தோமென்பதைத் தாழ்மை யோடு ஆராய்வோமாக. ஆனல் எங்கள் தகுதியீனத்தின் மத்தியி லும் கர்த்தர் பெரிய காரியங்க ளைச் செய்தாார், செய்துகொண்டு வருகிருர் எனத் துணிவோடு சொல் லலாம்.

ஆரம்பம்: 1959-ம் ஆண்டு ஏப் பிரல் மாதம் 29-ந் திகதி பரந்த னைச் சேர்ந்த முரசுமோட்டையில் நவஜீவனம் உதயமானது.

ஆட்கள்: முப்பதுவருடங்களாய் இலங்கை மெதடிஸ்த்மிஷனில் மிஷ னறியாக கடமையாற்றி இளைப் பாறிய சகோதரி எலிசபேத் பேக் கரும், தென்னிந்திய திருச்சபையின்

யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் ஊழியக்குடும்பம் கனம் ஏ. சி. தம்பிராசாவும் அவரது பாரியார் திருமதி அருள் தம்பிராசாவும் இவ்விடத்து ஊழியத்தை ஆரம்பித்தனர். 1960-ம் ஆண்டு தொடங்கி சகோதரன் ஏ. வி. யேசுதாசனும் இவ்வியக்கத்திருப்பணிக்குள் சேர்ந்துகொண்டார்.

நோக்கம்: 1. மக்களின் நல்வாழ்வுக்காக இயங்கும் திருச்சபை, இக்காலத்தின் எங்கள் தேசியதேவைகளையும், சமூகதேவைகளையும் உணர்ந்து அத்தேவைகளை ஓரளவுக்கு பூர்த்திசெய்யும் பணியில் ஈடுபடுதல்.

2. விவசாயத்திலும் கைத்தொழிலும் வாலிபர் ஊக்கமும். கருசனையுமெடுக்க ஏற்றவழிமுறைகளைக்கண்டுபிடித்தல்.

3. இம்முறைகளுக்கூடாக வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்சனையையும் பொருளாதாரத்தாழ்ச்சியையும், சமாளிக்க முயற்சித்தல்.

4. வேலையில்லாப் படித்தமாணவர்கள் உழைக்கக் கூடியதாக சந்தர்ப்பமும், வாய்ப்புமளித்தல்.

5. இல்லார்க்கு இல்லமாய் விளங்கும் ஓர் நிலையமாக்குதல்

6. இவைகளெல்லாவற்றிற்கும் மேலாகவும், இவைகளுக் கூடாகவும் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தவும், அவரது சபையை வளர்ப்பதுமே எங்கள் அடிப்படை நோக்கம்.

இயக்கம்: மேற்குறிக்கப்பட்ட நோக்குகளை அடிப்படையாகக் கொண்டு இந்நிலையத்தை ஒரு சமூக சமுதாய வாழ்வு இல்லமாக அமைக்க உழைக்கிறோம்.

பல தொழிலில் ஈடுபடுகிறவர்களும், பற்பல மனதேக நிலையுடையவர்களும், வயதில் ஏற்றத்தாழ்ச்சியினரும், வேவ்வேறு மரபு, மதத்தைச் சேர்ந்தவர்களும் கிறிஸ்து யேசுவுக்குள் ஒரு குடும்பமாக வாழ்வதே எங்கள் இலட்சியம்.

தற்போது நவஜீவனக் குடும்பத்தில் நான்கு மரபைச் சேர்ந்தவர்களும், மூன்று மதத்தைச் சேர்ந்தவர்களும் சீவிக்கிறோம். ஏழுவயதுள்ள சிறுரும், அறுபத்திஐந்து வயதுள்ள பெரியோரும் ஒரே கூரையின்கீழ் வாழும் இடமாகும்.

தொழில் வளர்ச்சி: பெரும்பாலும் நெல் உற்பத்தியே எங்கள் முக்கிய தொழில். பதினைந்து ஏக்கரோடு தொடங்கிய நாம் இப்போ எண்பது ஏக்கர் மட்டில் உற்பத்தி செய்கிறோம். இதில் இருபத்திஐந்து ஏக்கரே நவஜீவனத்தின் பொதுச் சொத்து. ஏனைய வயல்கள் குத்தகை வயல்களே. வருடம் சுமார் மூவாயிரம்புசல் நெல் விளைவிக்கிறோம். தற்கால உணவுத் தட்டுப்பாட்டின் நிலையில் கிறிஸ்துவின் சபை இது தன்னும் உற்பத்தியாக்கிறது சபைக்குப் பெருமையும் பெலனுமே.

ஊழியம்: எமது ஊழியம் இருவகைப்படும். நவஜீவனக் குடும்பத்துக்குள் இருக்கும் நாற்பது அங்கத்தவர் மத்தியிலும் எமைச்சூழ மூன்று மைல் விஸ்தீரணத்திலுள்ள எண்ணாயிரம் குடும்பங்கள் மத்தியிலும், எமது பணி நடைபெறுகிறது. நவஜீவனத்திலுள்ள பதினாறு

வயதுக்குட்பட்ட பதினெட்டு இளைஞர்களுக்கு இது ஒரு வீடாகும். இவர்கள் கடவுள் பயத்திலும், கல்வியிலும், சுத்தத்திலும், ஒழுக்கத்திலும் மேலான இலட்சியங்களிலும் வளரக்கூடிய சூழ்நிலையை கொடுக்கத் தெண்டிக்கிறோம்.

ஏனைய இருபத்திரண்டு வாலிபரும் தொழில் முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஐந்துபேர் தச்சுவேலையிலும், மூவர் டிரக்டர் பணியிலும், ஏனையோர் வயல், தோட்டம், கோழிப்பண்ணை, பாற்பண்ணை, சமையல், கிராமப்பாடசாலை எனுந் துறைகழில் ஈடுபட்டிருக்கிறார்கள். வேலையில்லாமல் வரும் எவரையும் நாம் கூடிய மட்டும் வரவேற்கிறோம். இவர்களுக்கு மாதத்தில் 1,500/- ரூபா சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது.

அயற் கிராமத்தில் இரு ஆங்கில வகுப்புகளும், ஒரு ஓய்வுநாட் பாடசாலையும் நடத்தப் படுகின்றன. நான்கு மைல் தூரத்திலுள்ள ஊரியான் என்னும் கிராமத்தில் கடந்த ஏழு மாதங்களாய் ஒரு திண்ணைப் பாடசாலை அங்குள்ள பதினறு பிள்ளைகட்கு நடத்திவருகிறோம். இப்பாலருக்கு அண்மையிலுள்ள அரசினர் பாடசாலை நாலரை மைல்களுக்கு அப்பாலேயே உண்டு. படித்த வாலிபர் தொண்டாற்றுவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பு.

ஆராதனை: நவஜீவன ஜெப ஆலயத்தில் ஒய்வுநாள் தோறும் காலை ஏழு மணிக்கு ஆராதனை நடத்தப்படும். இதற்கு சராசரி 45பேர் சமுகம் கொடுப்பார்கள். முதலாம் வாரத்தில் நற்கருணை அனுசரிக்கப்படும். இதற் சராசரி 15 பேர் பங்கு பெறுவார்கள். ஞாயிறு மாலை வேத வகுப்பும், ஓய்வுநாட் பாடசாலையும் நடத்தப்படும். இதற்கு 35 பிள்ளைகள் வருவார்கள்.

வருமானம்: வயல், தோட்டம், பாற்பண்ணை, தச்சுவேலை, கோழிப் பண்ணை முதலிய முயற்சிகளிலிருந்து வருடம் ஒன்றுக்கு சுமார் நாற்பதிணுயிரம் ரூபாயளவிலும், இன்னும் இவ்வூழியத்துக்கு அனுதாபிகளிடமிருந்தும் சுமார் பத்தாயிரம் வரை நன்கொடையாகவும் கிடைக்கப்பெறுகிறது.

செலவு: வருவாயிலும் பார்க்கச் செலவு கூடியதாக இருப்பினும் இது ''கர்த்தரின் ஊழியம்'' எனும் ரீதியில் விசுவாசத்தோடு இலக்கை நோக்கித் தொடருகிறோம். உணவு 25,000 வேதனம் 20,000 உடுப்பு, கல்வி, கட்டடம், பிரயாணம் இவைகளுக்கு இன்னும் 25,000 தேவைப்படும். நாளாந்த செலவுகளைவிட புது இயக்கங்களுக்கும் பணம் தேவைப்படுகிறது.

தேவைகள்: நாங்கள் எதிர்பார்த்ததிற்கு மேலாக வளர்ச்சியடைந்ததின் நிமித்தம் எங்கள் தேவைகள் அதிகமாயின. இதுகாறும் கர்த்தர் எங்கள் தேவைகளைப் பூர்த்தி பண்ணினதுபோல், வருங்காலத்திலும் தம்முடைய கொடைகளோடு எம்மைச் சந்திப்பார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

1. றேட்டிலிருந்து நவஜீவனத்துக்கு வரும் அரைமைல் மண் வீதியை நல்லறேட்டாய் அமைக்க வேண்டும்.

2. முடிவடையாதிருக்கும் மேல் வீடு முடிவடையவேண்டும்.

3. குழாய் நீர் வசதிக்கான தண்ணீர்த்தொட்டி ஒன்று அமைக்கப்படவேண்டும்.

4. பிரயாணவசதிக்கான ஓர் வாகனம்.

முற்போக்கு: பரந்தன் தொடக்கம் முல்லைத்தீவு வரையும் கிறிஸ்துவின் வாசனை விளங்கும்படியாக ஆங்காங்கு சிறுசிறு நிலையங்கள் அமைக்கப்பட்டு வாலிபர்கள் இந்நிலையங்களை இயக்கவேண்டுமென்மென்பதே நமது நோக்கு. இதற்காதாரமாக தருமபுரத்தில் 20 ஏக்கர் காணி அரசினரால் உதவப்பட்டிருக்கிறது.

இளைஞர் நகர்: நவஜீவனத்தின் முற்போக்குத் திட்டத்துக்குள் அமைந்த இளைஞர் நகர் என்னும் பேர்கொண்டழைக்கப்படும் நிலையம் நவஜீவனத்திலிருந்து ஒரு மைலுக்கப்பால் உள்ளது. பலதரப்பட்ட தொழில்முறைகளால் இந் நிலையம் அழகுபெற வேண்டுமென்பது எங்கள் வாஞ்சை, இத் திட்டங்களுள் ஒன்றாகிய தச்சுவேலை இப்பொழுது நடைபெற்றுவருகின்றது. இன்னும் இளம் விவசாயிகள் இந்நிலையத்தில் தங்கித்தரித்துச் செல்வதற்கும் இது ஓர் உகந்த இடமாய் விளங்குகிறது.

இங்கே 7 தொழிலாளர் இப்போ வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தச்சுவேலையிலும், சிறிது விவசாயத்திலும் ஈடுபட்டிருக்கின்றனர். இன்னும் இந்நிலையம் கைத்தொழில் நிலையமாக அமைந்து வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்நிலையம் உதவவேண்டுமென்பதும் எங்கள் உள்ளத்தின் பெருநோக்கம்.

நவஜீவன குடும்பமாய் நாம் நவ வருடத்துக்குள் பிரவேசிக்கும் போது கடந்த காலங்களில் கர்த்தர் செய்த மகத்துவமான கிரியைகளை நன்றியறிதலோடு நினைவுகூர்ந்து, தைரியத்தோடும், விசுவாசத்தோடும் புத்தாண்டில் பணிபுரிவோமாக.

வாழ்க.
எலிசபேத் பேக்கர்
அருள் தம்பிராசா
அ. செ. தம்பிராசா
ஆ. வே. யேசுதாசன்

நவஜீவனம்,
பரந்தன் 17 - 4 - 67.

# KARUNA NILAYAM

IN October 1955 Miss Hutchins retired from teaching and came to Kilinochchi with a Tamil friend and a gardener. They wanted to do something useful for the colonists who had less advantages than people in the towns. The D. R. O. wanted them to start a weaving centre, but when they went from house to house, asking parents what they wanted for their daughters, everyone asked for needlework.

At first it was a needlework class for day girls, then there seemed a need for training backward orphans who could not or would not study. So a hostel was started. Then the probation officer asked them to take in girls from the court. Some Kilinochchi parents brought grown up daughters whom they felt they could not protect at home, or daughters out of control. When the Government took over the Industrial school for the Deaf and Blind at Seeduwa, they wished to place elsewhere the homeless blind who were making their home there. Miss Hutchins and her companions offered to take in blind women trained in knitting, and now have five blind knitters. Later as some of the inmates did not get on well with needlework, they also started coir work.

Now Karuna Nilayam has a variety of inmates whose chief qualification is that they dont fit in elsewhere. There are unemployed girls, problem girls with home difficulties, wives driven out by drunken husbands, stray women or girls sent by the police, mentally retarded women. Some stay for a short while and rehabilitated elsewhere Some are fully paid for by guardians, registered orphans get government maintenance, the blind get an allowance from the social services, some are supported by the gifts of friends. The home is under the control of the Church of Ceylon, and gets a grant from the church in Jaffna. The goods made by the needlework class and the coir class are sold. At present there are 31 inmates and 4 helpers including Miss Hutchins, but members vary. If any woman or girls asks for shelter, and genuinely has no where to go, she is never refused admission. Girls have been linked up again with families with whom they had lost touch. Others have had marriages arranged for them. A few make this their permanent home.

# LUCKY HOTEL

# லக்கி ஹோட்டல்

**Bus Stand** **Kilinochchi**

## BISCUITS, BREAD, CAKES

**சிற்றுண்டி வகைகள், பலவித சாப்பாடு**

**சாய்ப்புச் சாமான்கள்**

முதலியன பெற்றுக்கொள்ளலாம்.



# JEYANANDA BAKERY & HOTEL

*CAKES, BISCUITS, BREAD,*

*I REAM,*

*COOL DRINKS.*

*Hotel & Bakery*

*Jeyananda First in kind*

Prop. H. T JINADASA,

**Kandy Road,** **Kilinochchi.**

கிளிநொச்சி, பரந்தன் கரைச்சி
மக்களின் விருப்பமே எமது சேவை

மருந்துகள், மருந்துச்சரக்குகள்

கோவில் அபிஷேக திரவியங்கள்

ராதா புரடக்ஸ் தயாரிப்பாளரின்

ஏக வினியோகஸ்தர்கள்.

## C. S. கணபதிப்பிள்ளை

அன் சன்ஸ்

51, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,

அன்பர்களே .....

விஜயம் செய்தவர்களால்
பாராட்டப்பெற்ற சிறந்த ஸ்தாபனம்

## "சித்தி மருந்துச்சாலை"

## CHITHI DISPENSARY

உங்கள் மருந்துத் தேவைகளை உடனுக்குடன் நம்பிக்கையாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

உரிமையாளர்:
விவேகானந்தன்

கந்தசுவாமி கோவிலடி,
கிளிநொச்சி

## செல்வா புத்தக நிலையம்

ஈழம்புகழ் மைனர்மச்சான், சவாரித்தம்பர்

ஆசிரியர் திரு S சுந்தர் எழுதும்

"சிரித்திரன்", குமுதம், கலைப்பொன்னி,
பொம்மை, கல்கண்டு,

ஆதியனவும் சகல விதமான பாடசாலைப் புத்தகங்களும் எம்மிடம் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்,

உரிமையாளர்: **V. வில்சன்**

கண்டி வீதி
கிளிநொச்சி

ஒருமுறை! விஜயம் செய்யுங்கள்!

## கணேசன் வெல்டிங் வேக்ஸ்

## GANESHAN WELDING WORKS

சகல விதமான மின்சார, ஒக்சிஜின் வெல்டிங் வேலைகளையும் சிறந்தமுறையில் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.

Propr: **m.** பிச்சை

கண்டி வீதி
கிளிநொச்சி

கடந்த 13 ஆண்டுகளாக
அழகும் கலையும் கொண்ட
புகைப்படங்களால்

அனைவரின் ஆதரவு பெற்ற
ஸ்தாபனம்

# கமலா ஸ்ரூடியோ

தற்போது நவீன மின்சார
சாதனங்களால்
இயங்குகின்றது.

தங்கள் தேவைகட்கு
எம்மை
கலந்து ஆலோசிக்கவும்

கண்டிவீதி, கிளிநொச்சி

புதிய வருடத்துக்கு மிகச் சிறந்த தயாரிப்பு!

# ஆனந்தா
திருக்குறட்
# கலண்டர்

எல்லா அம்சங்களும் பொருந்தியது.

*தயாரிப்போர்:*

**ஆனந்தா அச்சகம்**

**226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

தந்தி: அச்சகம். தொலைபேசி: 348.

**SR MURUGAN RICE MILL**

# ஸ்ரீ முருகன் அரிசி ஆலை

**நெல்லுக்குற்றுதல், அரிசி வியாபாரம்.**

போன்றவற்றிற்குப் பிரபல்யமானது,

ஸ்ரீ முருகன் அரிசி ஆலை.

உண்மையை அறிய உடன் விஜயம் செய்யுங்கள்.

கண்டி வீதி,
கிளிநொச்சி.

உரிமையாளர்:
**M.** சிவசம்பு

# RAJAH & COMPANY.

Battery Charging Service,
Distil Water Manufacturing

*Dealers in:* Agro - Chemicals,
Folidol, Endex, Shell No 50
Agroxone 4, Gramoxone.

KANDY ROAD, KILINOCHCHI.

# N. Vaithilingam & Co. Ltd.

Leading Importers, General Hardware Merchants
Engineers and Building Contractors.
Try us and you will be tully satisfied with the quality and price of out materials.
We manufacture "Thorn" brand Barbed Wire best in the Market, and also high quality Brass and Iron Wood Screws.

**Colombo Office**
*450, Old Moor Street,*
*Colombo 12*
*T' phone No 2029 & 7143,*

**Jaffna Office:**
*138, K. K. S. Road,*
*Jaffna.*
*T' phone No. 530.*

# நியூரோன்

# எலெக்ரிக்கல்ஸ்

(மின்சார ஒப்பந்தகாரர்)

எங்களிடம் எல்லாவகையான:-

- ✱ மின்சார உபகரணங்களும்
- ✱ எஸ்லோன், பீ. வீ. சீ. பைப்புகளும்
- ✱ மின்சார தண்ணீர் பம்புகளும்

**சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.**

**றட்ஜ் சையிக்கிள் விநியோகஸ்தர்கள்.**

நம்பர்: 228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

டெலிபோன் நம்பர்: 7016

# NEWTONE ELECTRICALS

(ELECTRICAL CONTRACTORS)

*For all your Requirements of:*

- ✱ **Electrical Goods**
- ✱ **Cycle Tyres, Cycle Tubes, and other Cycle Accessories**
- ✱ **S-Lon, P. V. C Pipes and Accessories.**
- ✱ **Electric Water Pumps**

*VISIT*

## NEWTONE ELECTRICALS

PRINCIPAL DEALERS IN:- **RUDGE CYCLES**

*Phone:* **7016**

***228, HOSPITAL ROAD — JAFFNA***

*With Best compliments from*

MURUGAN RICE MILL

Prop S. V, Murugesu.
**Kandy Road,** **Kilinochchi.**

**M. A. S. முத்தையா ஸ்ரோர்ஸ்**

பாடசாலைப் புத்தகங்கள் சாய்ப்புச் சாமான்கள்

"ஆனைச்சோடா"

*ஏக வினியோகஸ்தர்கள்.*

கண்டி வீதி, கிளிநொச்சி.

# யுனைற்றெட்

# ஸ்ரோர்ஸ்

பருத்தித்துறை.

எம்மிடம்!

மாணவரின் பாடசாலை உபயோகத்திற்கு அரசாங்கப் பதிப்பகத்தாலும் கல்வித் திணைக்களத்தாலும் வெளியிடப்படும் புத்தகங்களும், மற்றும் உலக அறிஞர்களது அறிவும் நூல்களும் நூல் நிலைய உபயோகத்திற்குரிய சிறந்த நூல்களும், சோதிட நூல்கள் அரிய நாவல்களும், மாணவருக்குரிய கதைப் புத்தகங்களும்

நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# YARL BAKERY,
# HOTEL AND STORES

Proprietor: N. MANVUELPILLAI

*KANDY ROAD,* *KILINOCHCHI.*

*NEWS AGENT,*
CAKES, BREADS, BISCUITS
FRESH BUTTER Etc.

நியூஸ் ஏஜென்ட்,
சிற்றுண்டிகள், கேக், பாண்,
பிஸ்கற், சுத்தமான பட்டர்

இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

திருமணங்கள், உல்லாசப் பயணங்கள்,
விருந்துபசாரங்கள், மற்றும் வைபவங்
களுக்குத் தேவையான இன்சுவை
உணவுகளுக்கான விசேட
ஆடர்கள் ஏற்றுக்கொள்
ளப்பட்டு குறுகிய
காலத்தவணையில்

செய்து கொடுக்கப்படும்.

## யாழ் பேக்கரி, ஹோட்டல்
## அன்ட் ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி, கிளிநொச்சி

# இலக்கிய விழா

நடைபெறும் இத்தருணத்தில்

கரைச்சி மக்களுக்குப், கரைச்சி கிராமசபைக்கும்

எமது நல்வாழ்த்துக்கள்

## சுந்தரம் பிறதர்ஸ்

ஆயுர்வேத மருந்துகள், மருந்துச் சரக்குகள்

கோயில் அபிஷேக திரவியங்கள்

விற்பனையாளர்

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



Printed and Published by Ilakiya Vila Kulu of Karachchi V. C.
at St Philomena's Press 102, Main Street, Jaffna.